RAMOTHANTHAM

இராமோதந்தம்

BY

A. KUMARASWAMY PULAVAR

Published by

North-Ceylon Tamil Works Publishing House

CHUNNAKAM

Copyright] 1949 [Price 60 cts.

841.6

உபநியாசம்

இராமபிரானுடைய சரித்திரத்தை இனிது பாராட்டிக் கூறும் நூல்கள் எத்தனையோ பலவாகும். வடமொழியிலே வான்மீக ராமாயணம், அத்தியாத்தும ராமாயணம், போதாயன ராமாயணம், பட்டிகாவியம், போசசம்பு, இரகுவமிசம் முதலிய பெருநூல்களிலும், இராமோதந்தம், பாலராமாயணம் முதலிய சிறு நூல்களிலும், தென்மொழியிலே கம்பராமாயணம், கூர்மபுராணம், இராமாயணக் கருப்பொருள், இராமாயண வெண்பா முதலிய நூல்களிலும் பெருக்கமுஞ் சுருக்கமுமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இராம சரிததைப் பராமுகமின்றிப் படிப்பாரும், பலராவர்; கேட்பாரும் பலராவர்.

இவையெல்லாவற்றுள்ளும் இராமோதந்தம் என்னும் இந்நூல் இலகுவுஞ் சுருக்கமும் இயைந்து வடமொழி பயிலும் மாணவர்களாற் பெரும்பாலும் முதற் பாடமாகக் கொண்டு படிக்கப்பட்டு வருகின்றது. இராமோதந்தம் என்பது இராமனுடைய சரித்திரம் எனப் பொருள்படும். இராம + உதந்தம் = இராமோதந்தம். இராமனாவான் புருட லக்கணமெல்லாம் பூரணமாய் நிறைந்த சகல சற்குணமும் வாய்ந்து தசரதச் சக்கரவர்த்தியிடம் அவதரித்த ஓரவதாரபுருடன். உதந்தம்—சரித்திரம்.

இதனைச் செந்தமிழ்நூல் படிக்குஞ் சிறுவர்களுக்கும் பயன்படும்படி மொழிபெயர்த்துச் செய்யுள் வடிவாகச் செய்யவேண்டும் என்று செந்தமிழ் நூல்களை நன்கு பயின்ற பண்டிதர் சிலர் விரும்பினர். அவர் விரும்பியபடியே யாமும் மொழிபெயர்த்துப் பெரும்பாலும் விருத்தப் பாவிலே அமைத்து முடித்தாம். சில கதைகள்

35714

கம்பராமாயணத்துக்கு மாறாய் வருதலுமுண்டு. சில சொன்மாலையின் பாகங்கள் செய்யுட்டொடை நோக்கி, வாளாவிடப்பட்டும் இருக்கின்றன.

அங்கிலமொழியிற் சென்ற ஆதுனிகர் சிலர் நூல்கள் செய்யுள் வடிவமாகச் செய்யப்படுதல் நன்றன்று என்றும், திரிசொற்களை விலக்கிச் செஞ்சொற்களைச் சேர்த்து வாக்கிய வடிவமாகச் செய்துமுடித்தல் நல்லது என்றும் சொல்லுகின்றனர். செய்யுள் வடிவமும் வாக்கிய வடிவமும் நோக்குங்கால் வெவ்வேறாகுமா? செய்யுளிலே சில இடங்களிலே மோனை, எதுகை முதலியனவும், பிறவும் நோக்கி அடைமொழிகள் சேர்க்கப்பட்டிருக்கும். அவைகளை நீக்கி நோக்கும்போது தோன்றுவது வாக்கியமல்லவா? செய்யுள்போல வாக்கியவடிவமும் நினைவிலே நெடுங்காலம் நிலைபெறுமா?. படிக்குந்தோறுஞ் சுவை பயப்பது யாது? செய்யுள் வடிவமேயாம்

இங்ஙனம்

சுன்னாகம்,
துன்மதி௵
தைமீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

காண்டவகை

பாலகாண்டம்.
அயோத்தியாகாண்டம்.
ஆரணியகாண்டம்.
கிட்கிந்தாகாண்டம்.
சுந்தரகாண்டம்.
யுத்தகாண்டம்.
உத்தரகாண்டம்.
உரை.

உ

இராமோதந்தம்

விநாயகவணக்கம்

பூவின் மேம்படு வன்மிக் முனிவரன் புகன்ற
காவி யந்தனைச் சுருக்கிய கட்டுரை யிராமன்
மேவு † தந்தநற் றமிழினிற் கவிதையாய் விளம்பத்
தேவ னைங்கரன் கரிமுகன் சேவடி பணிவாம்.

பாலகாண்டம்

உலக மேத்திய விச்சிர வசுவென வோதுந்
தலைமை சேர்முனி தந்திடுஞ் சிறுவர்க ளாகிக்
குலவி ராவணன் கும்பகன் னன்பெருங் குணஞ்சேர்
தலைவன் வீடணன் மூவரும் விளங்கினர் தலைநாள். 1

ஆய மூவரும் பலபக லருந்தவ மாற்றிச்
சேய தாமரைக் கிழவனை முன்வரச் செய்து
நேய மேவிய வரமெலாம் நினைவினிற் பெற்றார்
தூய மாதவஞ் செய்தவர்க் கரியதென் சொல்லின். 2

கூறு மானுட ரொழிந்தவெவ் வுயிர்களுங் கொல்லா
தேறும் வாழ்க்கையைத் தருகென விராவணன் கேட்டான்
நாறும் பைந்துளாய் முடியவ னடிமலர் நண்ணி
வீறு மன்பினைத் தருகென வீடணன் கேட்டான். 3

தேவ ரின்மையைக் கேட்டிடச் சிந்தனை செய்தும்
நாவின் மேவிய மொழிதடு மாறலை நண்ணிப்

---

† உதந்தம் — சரித்திரம்

பாவி கும்பகன் றுயில் கேட்டனன் படைப்போன்
யாவுங்கேட்டனகொடுததவண் மறைந்தன னிமைப்பில். 4

எங்கு லத்தவர்க் குரியதென் னிலங்கையைக் குபேரன்
இங்கு வந்தர சாள்வதென் னேயென விகலிப்
பொங்கி ராவணன் படையொடும் போரிடைப் புகுந்து
சிங்க வேறெனத் தாக்கினன் குபேரனைச் செறுத்து. 5

செறுத்து வென்றபின் புட்பக விமானமுந் திறலாற்
பறித்தி லங்கைமா நகரையுந் தன்னடிப் படுததி
வெறுத்து நொந்திட விண்ணவர் முனிவரர்க் கின்னல்
உறுத்தி வைகின னிலங்கையி லரசிய லுஞற்றி. 6

தெரியுஞ் சிற்பநூல் வல்லவன் செய்தொழின் மனத்தாற்
புரியுங் கம்மியன் மயன்றரும் புததிரி மங்கை
தரியெ னுமியை யிராவணன் றன்மனை வாழ்விற்
குரிய ளாமெனக் கடிமணம் புணர்ந்தன னுவப்பால். 7

மாது மற்றவள் வயிற்றிடை யொருமகன் வந்தான
மீது போமுகி லாமென முழங்கலான் மேக
நாத னென்றதோர் நாமமும் வலாரியை வென்றே
ஓது மிந்திர சித்தெனு நாமமு முற்றான். 8

ஈது மேவிய ராவணன் றனதுவெந் திறலாற்
பாத லம்புவி முதலிய வுலகெலாம் பயந்து
கேத மெய்திட வென்றுபே ரழகினாற் கிளர்ந்த
மாதர் தம்மையுந் தன்பெரு வலியினாற் கவர்ந்தான். 9

ஏசில் வேதநூல் சொல்லிய பொருள்களை யிகழ்ந்து
மாசில் வேதியர் குலமெலாம் வருந்திட வாட்டி
வாச வன்றனை மகனொடும் வந்துபோர் புரிந்து
பாச மேகொடு பிணித்தன னருஞ்சிறைப் படுத்தான். 10

தேவர் கோமகன் றருக்களை மணிகளைத் திறல்சேர்
ஏவ லாளராற் கொணருவித் திலங்கைமா நகரின்
மேவ நாட்டினன் தேவருக் கிடுக்கணும் விளைத்தான்
பாவ காரிகள் பார்ப்பரோ பிறர்படுந் துயரம். 11

அன்ன காலையில் வருந்திய தேவர்க ளயனைத்
துன்னி யன்னவன் கொடுமைகள் யாவையுஞ் சொன்னார்
பன்னு நான்மறைக் கிழவனுங் கேட்டுளம் பரிந்து
பின்னர் வானவர் தன்னொடும் பின்வரச் சென்றான். 12

சென்று பாற்கடல் சேர்ந்தனன் செம்பொருள் வாய்ந்து
நன்று மேவிய பலவித துதிகளு நவின்றான்
வென்றி மாயனுந் துதிகளான் மிகமனம் மகிழ்ந்தே
இன்று நீவருங் காரணம் யாதுகொ லென்றான். 13

செய்ய தாமரைக் கிழவனுந் தேவர்கண் முனிவர்
நைய ராவணன் செய்திடுந் தீங்கெலா நவில
ஐய வந்தன னெந்தைநின் னருள்சிறி துண்டேல்
உய்தி கூடுவங் காத்தரு ளெமையென வுரைத்தான். 14

அந்த வாசகங் கேட்டரு ளச்சுத மூர்த்தி
மைந்த நீபயங் கொண்டது மற்றினிப் போதும்
இந்த வானவர் தம்மொடுஞ் செல்லுதி யாமே
சிந்தை நொந்திடுந் தேவரைப் புரப்பது திண்ணம். 15

வெய்ய ராவணற் கொன்றிட விரைவினில் யாமும்
வையங் காத்திடுந் தசரதன் மைந்தனாய் வருவேம்
பொய்ய னாமவன் றன்னொடும் போர்புரி காலைத்
துய்ய வானவ ரெமக்கருந் துணைசெயும் பொருட்டு. 16

ஒன்றுந் தததம கூறுக ளூற்றிடப் புவியிற்
றுன்றும் வானர வடிவொடுந் தோன்றிடக் கடவர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

என்று நாரணன் பிரமனுக் கியம்பினன் மறைந்தான்
அன்று வானவர் பின்வரப் பிரமனு மகன்றான். 17

பின்ன ரிந்திரன் வாலியைப் பெற்றனன் வலிமை
துன்னு சுக்கிரீ வன்றனைச் சூரியன் பெற்றான்
அன்ன வாயுவு மநுமனைப் பெற்றன னதற்கு
முன்னர் நான்முகன் றந்திடச் சாம்பவன் முளைத்தான். 18

எனை வானவ ரேனைய குரங்குக ளாகி
மாநி லத்திடை வந்தனர் வாலியக் குரங்குச்
சேனை காவல னாகியே சென்றுகிட் கிந்தை
ஆன மாமலை வைகின னரசியல் செலுத்தி. 19

அன்ன காலையி லயோத்திவாழ் தசரத னென்னும்
மன்னன் கோசலை சுமித்திரை மாதுகை கேயி
என்னு மூவருந் தேவிய ரென்னினும் புதல்வர்
இன்மை நாடியே யிருந்துயர்ப் பெருங்கடற் படிந்தான். 20

உரிய மந்திரி சுமந்திர னுரைத்தசொற் படியே
அரிய வன்கலைக் கோட்டுமா முனிவனை யழைத்துக்
குருவ சிட்ட னுங் கூடிடக் குமரரைப் பயக்கும்
பெரிய வேள்வியைத் தசரதன் பிழையறச் செய்தான். 21

உற்ற வேள்வியி லவியொடு முதித்தொரு பூதம்
கொற்ற வன்கரத் தவியினைக் கொடுத்துநீ யிதனை
உற்ற தேவியர் மூவர்க்கு முதவெனச் சொல்லி
மற்ற வேள்வியிற் கொம்மென மறைந்ததை யன்றே. 22

மன்ன னீந்திட வவியினை மனைவிய ருண்டே
அன்ன காலமற் றவன்றனுற் கருவினை யடைந்தார்
பின்னர் நாளடைந் திராமனைக் கோசலை பெற்றாள்
பன்னு கேகயன் புதல்வியும் பரதனைப் பெற்றாள். 23

இகலி லக்குவன் சத்துருக் கன்னென யாரும்
பகர வந்திடு மிருவரைச் சுமித்திரை பயந்தாள்
மகித லந்தனின் மைந்தர்க ணால்வரும் வளர்ந்து
சகல கல்வியும் வல்லராய்த் தயங்கின ரன்றே. 24

ஓது மென்பெரு வேள்வியை யூறுக ளகற்றிப்
பாது காத்திட விராமனைத் தருகெனப் படைக்கைக்
காதி காதலன் கோசிகன் கடிதவ ணடைந்து
தாதை யாகிய தசரதன் றன்னிடங் கேட்டான். 25

உரிய மைந்தனைப் பிரிந்திட வுளமில னேனுங்
குருவின் வாசக மறுப்பதற் கஞ்சினன் கொடுபோய்
எரிகொள் வேள்வியைக் காக்குமா றிலக்குவ னோடுங்
கரிய மைந்தனைக் கோசிகன் கரத்தினிற் கொடுத்தான். 26

கொடுத்த மைந்தரைக் கோசிகன் கொண்டுபோய் வெற்றி
அடுத்த பல்வகை வித்தைக ளளித்தன னிராமன்
தடுத்து வந்தெதிர் தாடகை தனைமுனி சொல்லால்
வடித்த வம்புதொட் டாருயிர் நீத்திட வதைத்தான். 27

கருது மைந்தர்க டம்மொடுங் காமனுச் சிரமம்
மருவு கோசிகன் மகஞ்செய வரக்கரும் வந்தார்
வருசு வாகுவைப் பிறர்தமை வதைபுரிந் திராமன்
எரிகொள் வேள்வியைக் காத்தன னிலக்குவ னோடும். 28

காக்கும் வேள்வியை முடித்தபின் காளைய ரோடும்
ஆக்கு மாதவக் கோசிக னணிமதின் மிதிலை
நோக்கி யேகினன் வழியிடை நூதன மாகப்
பார்க்கு மாரொரு கல்லுருக் கிடந்தது படிமேல். 29

காணுங் கல்லினை யிராகவன் கழலடிப் பொடியால்
நாணும் பெண்ணுரு வாக்கியீ தென்னென நண்மை

மாணுங் கோசிகன் மற்றிவள் கோதமன் மனைவி
பேணுங் கற்பிழந் திவ்வுருப் பெற்றன ளென்றான். 30

அந்த மாதினை யம்முனி யிடத்தினி லருளி
முந்து மூவரு மிதிலையை யடைந்தனர் முன்னே
வந்த வில்லினை யிராகவன் வளைத்தனன் சனகன்
சிந்தை கொண்டனன் சீதைதன் திருமணச் செய்கை. 31

தூதர் மாமணச் செய்தியைச் சென்றனர் சொல்லத்
தாதை யாகிய தசரதன் முதலியோர் தாமும்
ஓது மற்றைய வேந்தரும் பிறரும்வந் தொருங்கு
தீது நீங்கிய மிதிலைமா நகரியிற் சேர்ந்தார். 32

அநக னாகிய ராமனு மங்கிசான் றாகச்
சனகன் மாமகள் சீதையை வேட்டனன் றங்கள்
மனமு வந்திடு மங்கையர் மூவரை யிளைய
புனிதர் மூவரும் வேட்டனர் தனித்தனி பொருந்தி. 33

வேட்ட மைந்தருந் தந்தையு மிதிலையிற் சனகன்
பூட்டு மணபினுக் குரியராய்ச் சிலபகல் போக்கிக்
கூட்ட மெய்திய கொடிமதி லயோத்தியை யெண்ணி
ஈட்ட மாகிய கிளையொடு மெழுந்தனர் போனார். 34

எழுந்து போதரும் வழியிடை யெதிர்ந்துதன் வீரம்
மொழிந்து தோன்றிய பரசுரா மன்வலி முற்றும்
அழிந்து போதர விராகவன் வென்றன னயோத்திச்
செழுந்த ராதலம் யாவரு மடைந்தனர் சென்று. 35

வனிதை சீதையோ டிராகவன் மனமகிழ் வாகி
*வினிதை வாழுநாண் மாமனைக் காணுதல் வேண்டி
நனிது லங்கிய கேகய நாட்டினை நோக்கி
இனிது சென்றனன் பரதன்மற் றிளவலும் போனான். 36

* வினிதை—அயோத்தி.

அயோத்தியாகாண்டம்

எவ்வர மெனினு மீவேன் வரமிரண் டென்ன முன்னம்
தெவ்வலியடக்கும்வேந்தன் செப்பியவார்த்தையெண்ணி
அவ்வர மிரண்டுங் கேட்க வமைந்துகை கேயி நின்றாள்
கைவருஞ் சூழ்ச்சி மிக்க கடியவள் கூனி சொல்லால். 37

காட்டினிற் போக வேண்டும் கரியவன் பரத னிந்த
நாட்டினை யாளவேண்டு நவிலுமிவ் வரமி ரண்டும்
வேட்டிடு கின்றே னின்றே தந்தரு ளென்று வேந்தைக்
கேட்டன ளிரக்க மில்லாக் கேகயன் புதல்வி மாதோ. 38

வேந்தனும் வரங்கொ டுத்தான் வீரனு மதனைக் கேட்டு
வாய்ந்திடுங் காடு செல்ல வழிக்கொளும் போதிற் சீதை
தேர்ந்துடன் வருவே னென்று சேர்ந்தன ளிளைய கோவும்
சேர்ந்தனர் மூன்று பேருஞ் சென்றனர் கான நோக்கி. 39

நாடுகள் கடந்து வந்து நதிகளுங் கடந்து கங்கை
கூடுறுஞ் சிருங்கி பேரக் கோநகர் சென்று வைகி
நீடுறுங் கங்கு லொன்று நீத்தனர் குகனென் றோதும்
வேடுவ னன்பிற் செய்த மெய்வழி பாடு கொண்டே. 40

இனியவ னிருக்கை கொண்டா லெம்மவர் வருவ ரென்று
குனிதரும் வரிவில் வேடன் குகன்கொண ரோட மேறிப்
பனிதருங் கங்கை நீங்கிப் பாங்கினிற் பரத்து வாச
முனிவரன் சாலை நண்ணி முன்விருந் தாகி நின்றார். 41

உத்தமன் பரத் துவாச னோதிய வார்த்தை கொண்டு
சித்திர கூட மென்னுந் திருமலை யடைந்தா ரந்தப்
புத்திரன் செய்கை கேட்டுப் பூபதி யுடலம் விட்டான்
அத்திரு நகர மெல்லா மழுகுரன் மலிய மாதோ. 42

கிட்டிய குருவின் வாக்காற் கெழுமிய வமைச்சர் மன்னர்
சட்டகம் பழுது றாது தைலத்தின் மாட்டி வைத்துப்
பட்டுள கருமந் தேறப் பரதனோ டிளவ லுக்கு
விட்டனர் தூதர் தம்மை விரைவினில் வருக வென்று. 43

தூதுவர் வார்த்தை கேட்டுச் சுமித்திரை புதல்வ னோடும்
போதரும் பரதன் வந்து புகுந்தன யாவுந் தேர்ந்து
தாதையா ருடலந் தன்னைத் தைலத்தி னின்றெ டுத்துப்
பேதமில் கிரியை யெல்லாம் பிழையறச் செய்த பின்னர்.

தாதையைத் துயரிற் போக்குந் தாயினைக் கடிந்து கூறி
மேதினி யாளு கென்று வேண்டும்வா சகமு நீக்கிக்
கோதறு மாசில் வைக விராமனைக் கொணரு மாறு 45
மாதுய ரத்தி னோடும் வனநெறி மருவி னானே.

சித்திர கூடஞ் சென்று தேவியை யிளைய கோவை
அத்தனைய னுங்கக்கண்டா னடைந்தகாரியமுஞ்சொன்னான்
அத்தனு மவனை நோக்கி யையநீ வந்த செய்கை
எத்திறமென்ன வுன்னை யான்கொடு போக வென்றான். 46

யாதுரை செயினுங் கொள்ளே னேழிரு வருட மீண்டே
தாதைசொல் வழாமல் வாழ்ந்து தனிநகர் பின்புசேர்வேன்
போதுமங் நாள்வ ரைக்கும் போய்ப்புவி யாளு கென்று
பாதுகையிரண்டுமீந்தான் பரதனும்பெற்றுவந்தான். 47

தந்தபாதுகையிரண்டுந் தனித்துணையாகக்கொண்டோன்
நந்தியங் கிராமம் வைத்து நானிலங் காவல் பூண்டான்
முந்தியம் மலையி ருந்தோர் மூவரு மத்தி ரிப்பேர்
அந்தண ரிருக்கை யெய்தி யதிதிபூ சனையும் பெற்றார். 48

ஆரணியகாண்டம்

அத்திரி முனிவன் வைகு மாச்சிர மத்தை நீங்கித்
தத்துநீர் மிக்க சோலைத் தண்டகா ரணியம் புக்கு
மெய்த்தவ ருறையுஞ் சாலை வேறுவே றாகப் போகி
அத்தவ ரருளும் பெற்றா ரகத்திய னருளும் பெற்றார். 49

குடமுனி யிடத்தி ராமன் குனிசிலை யாதி தெய்வப்
படைகளும் பெற்று நண்பின் பண்புறு சடாயு வின்பால்
மடநலா டனைப் புரக்கும் வாக்கையும் பெற்றுப் பஞ்ச
வடியெனு மிடத்திற் போனான் மற்றவ ரோடுமாதோ. 50

வாவிநீர் சூழும் பஞ்ச வடியிடைத் தனது கையால்
ஆவிபோன் றினிய தம்பி யாக்கிய பன்ன சாலை
தேவியுந் தானு மாகச் சென்றுவீற் றிருந்தா னென்ப
தேவர்தந் துயரை நீக்கத் திருவவ தாரஞ்செய்தோன். 51

ஆயிடை வைகு நாளி லரக்கிசூர்ப் பநகை யென்னுந்
தீயவள் வந்து கண்டு செம்மலை யிச்சை கொண்டாள்
ஆயவன் மறுத்தான் பின்ன ரநுசனும் வெறுத்து நீத்தான்
போயவள் சிறிது தூரம் பொருக்கென மீண்டும் புக்காள்.

சீதையைப் பற்றிச் செல்லத் தீயவ டோடா வன்னாள்
காதொடு மூக்குஞ் சிந்தக் கடிந்தன னிளைய கோமான்
பாதகி சென்று சொல்லப் படையொடு கரனும் வந்தான்
தீதறு மவனை மற்றைத் தீயரோ டிராமன் கொன்றான். 53

தீயவள் சோகத் தோடுஞ் சென்றுதென் னிலங்கை யாளும
நாயக னிராவ ணற்கு நடந்தவை யாவுஞ் சொன்னாள்
தீயவன் யாவுங் கேட்டான் சீதைமே லிச்சை கொண்டு
மாயமா ரீசன் றன்னை வருகநீ துணையா வென்றான். 54

மானுரு வெடுத்துக் கொண்டு மாயமா ரீசன் சென்று
சானகி முன்னே நிற்பச் சானகி யீது பொன்னின்
மானிதை நீபி டித்துத் தருகென வாஞ்சை கொண்டு
கோனடிபணிந்துகேட்டாள்கோனுமங்கதன்பின்போனன்

போனவன்கைக்கெட்டாமற்பொன்னின்மான்போதலோடும்
யானிதுபிடித்தற்கொல்லா தென்றவன்சரத்தால்வீழ்த்த
மானது சீதா லக்கு மணவென வுரைத்த சொல்லைச்
சானகி கேட்டு நோவத் தம்பியும் பின்பு போனன். 56

தம்பியும் போன பின்பு சானகி தனிய ளாகி
இம்பரில் வைகுங் காலை யிராவணன் றுறவி வேடம்
நம்புறக் கொண்டு சென்று நங்கையைக் கவர்ந்து செல்ல
உம்பரிற் சடாயு கண்டங் குருத்தவ ணெதிர்ந்தா னன்றே.

தாக்கியங் கெதிர்த்து நின்ற சடாயுவைச் சிறகு போக
நீக்கியிந் நிலத்தில் வீழ்த்தி நெட்டக ழிலங்கை புக்குப்
பூக்கம ழசோகங் காவிற் பூவையை யிருக்க விட்டுக்
காக்குமா றினிது வைத்தான் கடியசொல் லரக்கி மாரை.

பொன்னின்மா னதன்பின் போன பூபதி தம்பி வந்து
சொன்னவாசகங்கள்கேட்டுத்துயர்ப்பெருங்கடலின்மூழ்கிப்
பன்னசா லைக்கண் வந்து பாவையைக் காணு னாகி
இன்னலுற் றழுங்கு நின்று ளிருவருந் தேட லுற்றார். 59

இருவருந் தேடுங் காலை யிறகற்று வலியுங் கெட்டுத்
தரையினிற் கிடக்கு மந்தச் சடாயுகண் டவட்கு நேர்ந்த
கருமமும் வழியிற் சொன்ன காதையும் பிறவுங் கூறி
விரைவினி னுடலம் விட்டான் வீரருந் தகனஞ் செய்தார்.

அங்குவந் திகழ்ச்சி செய்த வயோமுகி யென்னு நாம
மங்கையை யிளைய கோமான் வன்செவி நாசி கொய்தான்

தங்களை யெடுத்துச் சென்ற கவந்தனைத் தம்பி யோடு
புங்கவ னறுத்து வீழ்த்தா னவனுந்தே வுலகம் போனன்.

தேவுல கேகுங் காலைச் சீதையைத் தேடு தற்குத்
தாவுசுக் கிரீவன் றன்னைச் சாருதி யென்று சொன்னன்
ஆவதுங் கேட்டார் பின்ன ரவ்விடம் விட்டுத் தென்பான்
மேவினர் சவரி வைகும் விரதவாச் சிரமஞ் சேர்ந்தார். 62

சவரியாச் சிரமம் புக்குச் சவரிபூ சனையும் பெற்றுக்
கவலையி னோடுந் தென்பா லருஞ்சுரங் கடந்து சென்று
குவடுகள் பலவுஞ் சூழ்ந்து குலவுகிட் கிந்தை யென்னும்
புவிபுகழ் மலையிற் போந்து புலம்பொடு மிருந்தா ரன்றே.

கிட்கிந்தாகாண்டம்

சுக்கி ரீவ னனும னெனச்சொலும்
மிக்க வானர வீர ரிருவரும்
அக்கி ரிக்க ணிருந்தன ராடுபோர்
புக்கு வாலி பொருவலிக் கஞ்சியே. 64

இருந்த வானர வீர ரிருவருட்
டிருந்து மாருதி சேர்ந்த விருந்தனைத்
தெரிந்து மற்றவர் செய்கை முழுவதும்
பரிந்து கேட்க வவர்களும் பன்னினர். 65

தொக்க மைந்தர்கள் சொல்லிய யாவையுஞ்
சுக்கி ரீவற்குச் சொல்லி யவனையும்
புக்கு மைந்தர்க ளோடு பொருத்தினன்
மிக்கு நண்பு வளர்ந்து விளங்கவே. 66

ஒருவர் செய்தி யொருவ ருணர்ந்திட
இருவர் தாமு மியம்பினர் வாலியைப்

பொருவ னென்றனன் புங்கவன் மற்றவன்
தருவ னென்றனன் றையலை நாடியே. 67

நாடும் வாலி வலிமையு நண்ணிப்போ
ராடித் தன்னை யலைத்தலுந் தன்மனை
கூடுந் தேவியைக் கொண்டதுஞ் சீதையைத்
தேடி வந்தவர் தேற விளம்பினான். 68

நிலங்கி டந்து நிமிர்ந்து மலையென
அலங்குந் துந்துபி யாக்கை யெலும்பினைக்
கலங்கி வந்தவர் கண்டிடக் காட்டினான்
துலங்கும் வெவ்வலி சோதனை செய்யவே. 69

கரிய கோமகன் காட்டித்த னக்குச்சுக்
ரீவன் சொன்னதுங் கேட்டுத்தன் காற்பெரு
விரலி னெற்றினன் விண்ணெழுந் தம்மலை
ஒருக ணத்தினு ளோடிற்று நீளிடை. 70

பராரை மேவி யுயர்ந்து படைகளும்
விராவு தற்கருந் திண்மை விளங்கிய
மராம ரத்தொகை காட்டினன் மற்றவை
இராமன் பாணமொன் றேழுந் துளைத்ததே. 71

இந்த வீர ரிருவரு மெம்பகை
சிந்து வாரெனச் சிந்தை மகிழ்ந்திடும்
அந்த வீரரு மம்மையைத் தேடிட
வந்த வீரரு மம்மலை வைகினார். 72

வருக போர்க்கென வாலியைத் தம்பிசுக்
ரீவன் வீரங் கிளந்தறை கூவினன்
விரைவின் வாலியும் மேவ வவனொடும்
பொருத தம்பி புறங்கொடுத் தேகினான். 73

ஏகும் வீர னிராமனொ டெண்ணியே
வாகை வாலியைப் பின்னும் வருகெனப்
போக வந்தவ னும்பொரப் புங்கவன்
வேக வாளி மறைந்து விடுத்தனன். 74

விட்ட வாளி விரைந்துதன் மார்பகம்
பட்டு வாலி சுவர்க்கம் படர்ந்தனன்
கிட்டு மச்சுக் கிரீவன்கிட் கிந்தையிற்
பட்ட மெய்தி யரசியல் பற்றினான். 75

சென்று வீர ரிருவருந் தென்றிசை
நின்ற மாலிய வானெனு நீண்மலை
துன்றி யீரிரு மாசந் தொலைத்தனர்
வென்றி வீரன் விளித்தனன் றம்பியை. 76

ஈட்ட வானர வேந்தனை யிவ்விடைக்
கூட்டி வாவெனக் கொற்றவன் கூறலும்
கேட்ட தம்பி யழைக்கக் கிளர்ந்தவன்
கூட்டி னத்தொ டிராமனைக் கூடினான். 77

கூடும் வானரக் கோமகன் சீதையைத்
தேடும் வண்ணந் திசையொரு நான்கிலும்
ஓடும் வானர வீரரை யுய்த்தனன்
தேடு வீரொனுஞ் செம்ம லுரையினால். 78

சீதை கண்டு தெளிந்து துணிந்திட
ஏது மற்ற விதனைக் கொடுவென
நாத னீந்திடு நல்விர லாழியும்
பேத நீங்கு மநுமனும் பெற்றனன். 79

அநும னங்கத னாதியர் தென்றிசை
நணிபு குந்துசம் பாதி நவின்றிடும்

வனிதை வாய்மொழி வார்த்தையுங் கேட்டனர்
இனிது தென்கட லெல்லை மருவினார். 80

மருவு தென்கடல் வாவி யிலங்கைபுக்
கரிவை செய்கை யறிந்துடன் வந்திட
ஒருவ ரேனு முடன்பட் டிலருளம் 81
வெருவி வானர வீரர் குழாத்துளே.

தற்பு கழ்ந்துரை சாம்பவன் கூறிடப்
பெற்ற மாருதி யோகை பெருகியே
பொற்பி னோடு பொலிந்து மகேந்திர
வெற்பி னுச்சியி லேறி விளங்கினான் 82

சுந்தரகாண்டம்

அடல்பெருகு மாருதியு மம்மலையின் மீதெழுந்து
மிடல்பெருகு மைந்நாக மீதெழுந்து வருவதும்பார்த்
துடலொருவ வருமரக்கி யுயிரையுங்கொன் றவ்வழியே 83
கடலழுவந் தாவியிலங் காபுரியுங் கண்டனனே.

வாரியெழு மாருதியும் வழிமறிக்கு மிலங்கைமகா
தேவிதனை வலிதொலைத்துத் திறலரக்கர் நகரியிற்போய்ப்
பாவியிரா வணன்றுயி லும்பான்மையும்பார்த்தசோகமரக்
காவிலிருந் தொருவனிதை கலங்குவதுங் கண்டனனே.

இங்கிவளா ரெனவநுமா னிலைமறைக்கு மரக்கிளையில்
தங்கியிருந் துளமயிர்க்குஞ் சமயத்தி லிராவணனும்
மங்கையிடம் வந்தெனக்கு மனையவளா கெனவிரப்ப
அங்கவளுங் கடிந்துரைத்தா ளவனுமகன் றேகினனே. 85

பாதபத்தின் மிசையிருந்தோன் பலவாறு புலம்புகின்றாள்
சீதையென நிச்சயித்துச் சிந்தைமகிழ்ந் தணிமையிற்போய்க்

காதலன் றன்செய்கையெலாங்கட்டுரைத்துத்தான்கொணர்ந்த
மோதிரமு மவளிடத்தின் முறைநின்று கொடுத்தனனே.

நலங்கிளரு மோதிரத்தை நாதனணி யீதெனவே
கலங்கிமனம் வெய்துயிர்த்துக் காதலனைப் பிரிந்துநின்ற
பொலங்கொடியுமிங்கிதனைப் புங்கவன்பாற்கொடுத்தியென
அலங்கியசூ டாமணியை யநுமனிடங்கொடுத்தனளே. 87

சூடைமணி தனைப்பெற்றுத் தூதனெனு மநுமானும்
பீடையினிக் கொளவேண்டாம் பெண்ணணங்கே வெய்போரிற்
கேடுசெயு மிராவணனைக் கிளையோடு முடிவெய்தச்
சாடியுனை யும்மழைத்துத் தன்னகரஞ் செல்லுவனே. 88

என்றுசொலி யனுமானு மவ்விடப்விட் டேகியயல்
நின்றபொழி லிறுத்தழித்து நேர்ந்தவக்கன் முதலாகத்
துன்றியதொல்லரக்கர்குலந் தொலைந்தொழியக்கொன் றழித்துக்
கன்றியவிந் திரசித்துக் கட்டிடவும் பெற்றனனே. 89

கட்டுடனே மாருதியைக் கைக்கொடுபோயிராவணன்முன்
விட்டிடலு மபவாதம் வெறுத்துரைத்த ராவணற்குப்
பட்டமுறுந் தசரதனார் பாலகன்றன் பெருமையெலாங்
கட்டுரைத்துத் தன்வலியுங் கலங்காது காட்டினனே. 90

தோல்வியுறு மாக்கரெலாஞ் சூழ்ந்தநுமன் வாலினிடைச்
சீலைபல பந்தமுறச் செய்துதயி லமும்விட்டு
வாலெரிகவெனக்கொளுத்தவளர் நெருப்போடெங்கணும்போய்க்
கோலவிலங்காபுரியைக் கொளுத்திமுற்றவெரித்தனனே.

கலங்கவெரி கொளுத்தியபின் கடல்கடந்து வானரத்தின்
குலஞ்சளைச்சேர்ந்தவற்றினொடுங்கொம்மென ராமனையணுகி
இலங்கைநக ரிடைநிகழ்ந்த செய்கையெலா மியம்பியபின்
அலங்கியசூ டாமணியு மவன்கரத்தி னீந்தனனே. 92

புக்கிலங்கை நகரியிடைப் பூரியன்மேற் போரல்கருதிச்
சுக்கிரிவன் முதலாகச் சொல்லியவா னரங்களொடும்
மிக்கதச ரதன்புரிந்த விழுமியமா தவப்புதல்வன்
தெற்கிலுறும் பெருங்கடலின் றிரைக்கரையைக் கண்டனனே.

முன்னவனோ டும்பகைத்து முதுணர்ந்த வீடணனும்
பின்னவனுஞ் செயராம பிரானருகில் வந்தணைந்தான்
அன்னவனை யினியிலங்கைக் கரசாக வபிடேகஞ்
சொன்னமுறை யாற்புரிந்து தூயவனும் வைத்தனனே. 94

ஆயபெருங் கடற்கிடையே யணையென்னுஞ் சேதுவினை
நாயகனு கியராம னளனைக்கொண் டாற்றுவித்துப்
பாயுநெடு வானரராய படைகளொடு மவ்வழியே
தீயர்செறிந் திடுமிலங்கைச் சுவேலமலை சேர்ந்தனனே. 95

யுத்தகாண்டம்

பின்னி ராகவன் பணித்திடப் பெருவலி யமைந்து
முன்னர் நின்றிடு நீலனை முதலவா னரர்கள்
இந்நி லஞ்செறி கல்லொடு மரங்களை யெடுத்து 96
முன்ன ரேகியே யிலங்கையை முற்றுகை செய்து.

தீய ராவணன் பணியினாற் போரிடைச் சேர்ந்த
மாய வன்பிர கத்தனை மற்றுளார் தம்மைக்
காயம் விட்டிடப் பொருதனர் கடுந்திற லரிமா 97
மேய வன்மையுங் காட்டினர் வீரமேல் கொண்டு.

சுக்கி ரீவனு மநுமனு மாமரந் துளைத்த
அக்கு மாரனுந் தம்பியு மமரிடை வந்து
புக்க வெந்திற லரக்கரை வேரொடும் போக்கி 98
மிக்க வீரமுங் காட்டினர் தேவர்கள் வியப்ப.

அன்ன போதினி லிந்திர சித்தெனு மடலோன்
மன்னன் மைந்தரா மிராமலக் குவர்களை வன்மை
துன்னு நாகபா சத்தினாற் பிணித்தனன் றொடர்ந்து
பன்ன காரிவந் ததன்வலி தொலைத்தனன் பறக்க. 99

சம்பு வெள்ளியம் பொருப்பினை யெடுத்தவன் சலியா
தம்பு வில்லிடைப் பூட்டியே யமரிடை யெதிர்த்துத்
தும்பை சூடிய ராகவன் பொருதிடத் தொலைந்து
கும்ப கன்னனைத் துயிலெடுத் தேவினன் கொதித்து. 100

பன்னும் போரினி லரக்கர்கள் பலரொடும் வந்து
துன்னி வானர வீரரைத் தொலைத்துனுங் கும்ப
கன்ன னுநுயிர் நீங்கிடக் கடிதினிற் றொலைத்தான்
முன்னம் வாலியை மார்பகந் துளைத்திடு முதல்வன். 101

தீய விந்திர சித்துபின் போரிடைச் சேர்ந்து
சேய தாமரை யாசனன் படையினைச் செலுத்தித்
தூய ராமனோ தம்பியை வானரத் தொகையை
மாய மாகவே மயக்கின னறிவெலா மாள. 102

சண்ட வாயுவின் றிருமகன் வடதிசை சார்ந்து
கொண்டல் சேர்வுறு மருந்துமா மலையினைக் கொணர்ந்து
மண்டு மோகநீத் தவரெலாம் வாழ்ந்திடச் செய்து
பண்டு போலவும் மலையையும் வைத்தனன் படர்ந்து. 103

இந்நி லத்தினி னிதும்பலை யெனுமிடங் குறுகிப்
பன்னும் வேள்வியொன் றாற்றின னிந்திர[...]
சொன்ன வீடணன் றன்னொடுஞ் சுமத்திரை மைந்தன்
அன்ன வேள்வியை யழித்தபின் னவனையு மழித்தான்.
வேட்ட வேள்விபோய் மைந்தனும் விளித்திடுஞ் செய்தி
கேட்டி ராவணன் கோபதா பத்தொடுங் கிளர்ந்து

கொழும்பு தமிழ்ச்
நூலக

தீட்டும் வெஞ்சரஞ் செலுத்திவா னரங்களை வருத்திப்
பூட்டும் வார்சிலை யிராமனோ டருஞ்சமர் புரிந்தான். 105

வெருவும் போர்பல வீர மனும் வியந்திடவாற்றிப்
பிரமன் வெம்படை விட்டிரா வணன்முடி பிறங்குஞ்
சிரமெலா மறுத் தொழித்தனன் செயசெய வென்றே
விரியும் பூமழை விண்ணவர் சொரிந்தனர் வியந்து. 106

அரக்கர் தங்களுக் கரசனா யமர்ந்துதென் னிலங்கை
புரக்க வீடணன் றனைவிடுத் தெரியுளே புகுந்து
பொருக்கெனச்சுசி யெய்தியே புறம்வருஞ் சனகன்
திருக்கு மாரியை யழைத்தன னிராமனுஞ் சேர்ந்து. 107

ஐய னிந்திரன் வரத்தினா லவ்விடை நிகழ்ந்த
வெய்ய போரினி லிறந்திடும் வானர வீரர்
உய்யு மாறெடுத் தவரெலா முவந்திடச் செய்தான்
செய்ய வாகிய பொருள்பல சிறப்பொடும் வழங்கி. 108

மாது தன்னொடி லக்குவன் றன்னொடும் வானிற்
போதும் புட்பக மேறிமுன் னநுமனைப் போக்கித்
தீதில் வீடணன் றன்னொடும் வானரர் சேர
நாத னேகினன் விரைவினி லயோத்தியை நாம். 109

அநுமன் சொல்லினாற் பரதன்றன் செய்தியு மறிந்து
தனைய ழைத்திட வந்தவர் தம்மொடுஞ் சார்ந்து
குனியும் வில்லுடை ராகவன் கோதறு முனிவர்
புனையும் வேடநீத் தணிமதி லயோத்தியிற் புக்கான். 110

குருவ சிட்டனும் பிறரும்வந் திராமனைக் குறுகி
அரசு செய்கென வணிமுடி சூட்டின ரவனும்
விரியும் வெண்குடை நிழற்றியே மேதினி புரந்தான்
அரிவை தன்னொடு மயோத்திமா நகரினி லமர்ந்து. 111

உத்தரகாண்டம்

கலக மாற்றிய ராவணன் கவர்ந்துகொண் டகன்ற
திலக வாணுதன் மனைவியைச் சேர்ந்தன னென்றே
உலகம் பேசிய பழிமொழிக் குள்ளக நாணி
விலக நீக்கினன் சீதையை யிராமனும் வெறுத்து. 112

விலக்கும்சீதையைக்காட்டினிற் கொண்டுபோய் விரைவில்
இலக்கு வன்விட வெதிர்ந்துவான் மீகிமா முனிவன்
குலக்க ருந்தவ மேவுமாச் சிரமத்திற் கொடுபோய்
அலக்க ணீங்கிட விருத்தியா தரித்தன னவளை. 113

மெய்த்த போதனர் வேண்டிட ராமனும் விரைந்து
சத்து ருக்கனை யேவினன் சாடுமா றவனும்
யுத்த மேவியே யிலவண னுயிரினைச் சாடி
அத்த போதனர் குழுவினை யன்பொடுங் காத்தான். 114

சனகி போன்றவோர் வடிவினைச் செங்கிறந் தயங்கும்
கனக மேகொடு செய்துவைத் தருமகங் கண்ட
அனக னச்சுத னிராமன்பா லன்பொடுங் கொடுபோய்ச்
சனகிதன்னையுங்கொடுத்தனன் றவப்பெருமுதல்வன். 115

அன்ன நாயக னெஞ்சக மயிர்த்திட நின்ற
பன்னி பூமகள் சீதையும் பரிவொடு வேண்ட
அன்னை யாகிய நிலமக ளளித்திடுந் துவாரம் சங்கம்
தன்னி லன்பொடும் புகுந்தனள் கற்பிய றபங்க. 116

வண்ண வார்சிலை முரித்தவ னாணையின் வழியே
தண்ண றும்புனற் சரயுவென் றிருநிலம் புகலும்
அண்ணன் மாநதி முழுகியே யாக்கையும் விடுத்து
விண்ண டைந்தனர் வானர வீரரு மாதோ. 117

பாதனோடுமற் றிருவரும் பழையதம் வடிவம்
மருவி வைகினர் மாநுட வடிவினை விடுத்து
வாத சின்மய ராமனும் வைகுந்த நிலையம்
விரவி யாருயிர் புரந்துவீற் றிருந்தனன் மாதோ. 118

வாழி யந்தணர் மன்னவர் பின்னுளோர் மறைகள்
வாழி மாமுனி லறநெறி வைதிக சைவம்
வாழி செந்தமி ழிலக்கிய லக்கண வரம்பு
வாழி ராகவன் பெருங்கதை மாநிலத் தினிதே.

முற்றிற்று.

இராமோதந்தம் உரை

விநாயக வணக்கம்

இதன் பொருள் : பூவில் மேம்படு வன்மிக முனிவரன் புகன்ற காவியந்தனை – பூவுலகத்தி லுயர்ச்சிபெற்றிருக்கும் வான்மீக ரென்னும் முனிசிரேட்டர் கூறிய (இராமாயண மென்னும்) காவியத்தை. சுருக்கிய கட்டுரை மேவு இராமன் உதந்தம் - சுருங்கச் சொன்ன கட்டுரையே பொருந்திய இராமோதந்த மெனப்படும், நல் தமிழில் கவிதையாய் விளம்ப - (அந்த வடமொழிக்கணுள்ள இராமோதந்தத்தை யாம்) நல்ல தமிழிலே செய்யுளாய்ப் பாடுவதற்கு, தேவன் ஐங்கரன் கரிமுகன் சேஅடி பணிவாம் - (எவர்க்கும் முன்னின்றருளும்) தேவரும் ஐந்து கரங்களை யுடையவரும் யானை முகத்தினருமாகிய விநாயகக் கடவுளது செம்மையான பாதங்களை வணக்கஞ்செய்வேம். எ — று.

யாம் என்னும் எழுவாய் தொக்கு நின்றது. செய்யுளாகலின் மேவு என்னுமடை இடையில் வந்தது. இராம+உதந்தம்—சரித்திரம்.

பாலகாண்டம்

1. **இ - ள் :** உலகமேத்திய விச்சிரவசு என ஓதும் தலைமை சேர்முனி -- உலகத்தவர் துதி செய்கின்ற விச்சிரவசு வென்று விதந்து பேசும் முதன்மை சேர்ந்த முனிவர், தலைநாள் தந்திடும் சிறுவர்களாகி – முதனாளிலே (கைகசி என்னும அரக்கமாதுடன் கூடி) பெற்ற புத்திரர்களாகி, குலவு இராவணன் – பிரசித்திபெற்ற இராவணனும், கும்பகன்னன் - கும்பகன்னனும், பெருங்குணம சேர் தலைவன் வீடணன் - பெருங்குணஞ் சேர்ந்த தலைவனான விபீடணனுமாகிய. மூவரும் விளங்கினர் - இந்த மூன்று பெயரும் விளக்கமுற்றார்கள். உலகம்–ஆகுபெயர்; உயர்ந்தோருமாம்.

ஆகி – விளங்கினர் என்றியையும். ஏத்திய – கால மயக்கம். வீடணன்-விபீடணன். சாத்துவிக குணமுடைமையின் விபீடணனுக்குப் பெருங் குணஞ்சேர் தலைவனென அடை கொடுத்தார். விச்சிரவசு - பிரமன் மகனாகிய புலத்தியனின் மகன்.

இலங்காபுரியை ஆதியி லரசியற்றிவந்த மாலி, மாலியவான், சுமாலி என்னும் மூன்றிராக்கதர்களையும் இயக்கர் வேந்தனாகிய குபேரன் போரிற் புறந்தரச்செய்து, இலங்கா

புரியைத் தான் கவர்ந்துகொள்ளப் போரிற் புறந்தந்துபோன
இராக்கதர்கள் மூவரும் பாதலத்திற்சென்றிருந்து குபேரனை
வெற்றிகொள்வதற்கும் திரிலோகங்களையு மாள்வதற்கு
முரிய பராக்கிரமசாலிகளான புதல்வர்களைப் பெறவேண்டு
மெனக் கருதிச் சுமாலியின் புத்திரியான கைகசி என்பவளை
நோக்கி, உன்னாலே எங்கள் குல மீடேறவேண்டுமென்று பல
வாறுகூறி உடன்படுமாறு செய்து விச்சிரவசு வென்னும்
முனிவனிடத்துக்கனுப்ப, கைகசியுந் தபோவனத்திற் போய்
லீலைகளால் மயக்கி அம்முனிவனுடன் கூடிப்பெற்ற புதல்வர்
களே இராவணன் கும்பகன்னன், விபீடணன் சூர்ப்பனகை
என்னும் இவர் நால்வரும் என்றுணர்க, விச்சிரவசு இயக்க
மாதுடன் கூடிப்பெற்ற மகன், வைச்சிரவணன்—குபேரன்.

2. **இ—ள்:** ஆய மூவரும் - அந்த மூன்று பேரும், பல
பகல் அருந்தவம் இயற்றி - நெடுங்காலம் செயற்கரிய தவத்
தைச் செய்து, சேய தாமரைக் கிழவனை முன்வரச் செய்து -
செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரைத் தங்கள்
முன்பாக வரவழைத்து, நேயம் மேவிய வரமெலாம் நினைவி
னில் பெற்றார் - தாம் விரும்பியிருந்த வரங்கள் முழுவதை
யும் எண்ணியபடியே பெற்றார்கள், சொல்லின் — கூறு
மிடத்து, தூயமாதவஞ் செய்தவர்க்கு அரியது என் - சுத்த
மாகிய பெரிய தவத்தைச் செய்தவர்களுக்குப் பெறுதற்கரி
யது யாதுமில்லை.

என் — எதிர்மறைக்கண் வந்த வினாவினைக் குறிப்பு. கிழ
வன் — உரியவன், இச்செய்யுள் வேற்றுப் பொருள் வைப்
பென்னுமணி.

3. **இ—ள்:** இராவணன் - இராவண னென்பான்,
கூறும் மானுடர் ஒழிந்த - சொல்லப்படுகின்ற மானுடரைத்
தவிர்ந்த, எவ்வுயிர்களும் கொல்லாது ஏறும் வாழ்க்கையைத்
தருக எனக் கேட்டான் - மற்றெந்த வுயிர்களும் தன்னைக்
கொலை செய்யாமல் ஆயுள் நீடித்திருக்கும் வாழ்க்கையைத்
தரக்கடவை யென்று கேட்டான், வீடணன் - வீடணனென்
பவன், நாறும் பைந்துளாய் முடியவன் அடிமலர் நண்ணி -
பரிமளம் வீசுகின்ற பசுமையான துளசி மணியாற் செய்த
மகுடத்தையுடைய மகாவிட்ணுமூர்த்தியினது பாத தாமரை
களில் அழுந்தி, வீறும் அன்பினைத் தருக எனக் கேட்டான் -
தீவிரதரம் பெற்றிருக்கும் அன்பைத் தரக்கடவை யென்று
கேட்டான்

தருகென - தொகுத்தல் விகாரம், பிறவுமன்ன. துழாய் -
ஆகுபெயர், பதினெண்கணங்களுட் சொல்லப்பட்டவரென்

பார், "கூறு மானுடர்" என்றும், "மானுடரை யோர்
பொருட்படுத்திலன் என்பார் மானுடர் ஒழிந்த" என்றும்,
விலங்குகளையும் பொருட்படுத்தினன் என்பார் "எவ்வுயிர்க
ளும்" என்றுங் கூறினார்.

4. **இ—ள்:** பாவி கும்பகன்னன் - பாவியாகிய கும்ப
கன்னன், தேவர் இன்மையைக் கேட்டிடச் சிந்தனை செய்
தும் - தேவர்களுக் கழிவைச் செய்வதாகிய வரத்தைக் கேட்க
வேண்டுமென்று தன் நினைவிற் கொண்டிருந்தும், நாவின்
மேவிய மொழி தடுமாறலை நண்ணி - நாவின்கணிருந்த சொல்
மாறுபடுதலைப் பொருந்தலால், துயில் கேட்டனன் - நித்
திரை வரத்தைக் கேட்டான், படைப்போன் சிருட்டிகர்த்
தாவாகிய பிரமதேவர், கேட்டன யாவும் கொடுத்து இமைப்
பில் அவண் மறைந்தனன் - மூவருங் கேட்ட வரங்களைக்
கொடுத்து கணப்பொழுதில் அவ்விடத்து நின்று மறைந்து
போயினர். நண்ணி — ஏதுப்பொருட்டு.

நெடுங்காலந் தவம்புரிந்தும் அதுவே தியானமாகக்
கொண்டிருந்த வொன்றைப் பெறாது தேவர்களின் சூழ்ச்சி
யால் சொல் மாறுதலைப் பொருந்தித் தான் வேண்டா
நித்திரை வரத்தைப் பெற்ற கன்மத்தை யுடையவனென்
பார் 'பாவி கும்பகன்னன்" என்றார்.

தங்களுக்குக் கேடு செய்யும் வரத்தைக் கேட்கப்போகின்
றானென்பதை யுணர்ந்த தேவர்களின் வேண்டுகோளுக்
கிரங்கி நாமகள் அவன் வாக்கைத் தடுமாறச் செய்தன
ளென்றுணர்க.

5. **இ—ள்:** எம் குலத்தவர்க்கு உரிய தென்னிலங்
கையை - இராக்கத குலமாகிய எங்கள் குலத்தவர்களுக்கே
(பண்டுதொட்டு) உரிமையுடைய தென்னிலங்காபுரியை,
குபேரன் இங்கு வந்து அரசாள்வது என்னோ என இகலி -
குபேர னென்னுமியக்க னிங்கே வந்தரசியற்றுவ தென்ன
காரணமென்று பகைமேற் கொண்டு, பொங்கு இராவணன்
படையொடும் போரிடைப் புகுந்து - மலைக் கொதிப்புற்ற
இராவணன் படைகளோடும் யுத்தத்தின்கண் வந்து, குபேர
னைச் செறுத்து சிங்க ஏறு என தாக்கினன் - குபேரனென்
பவனைக் கோபித் தாண்சிங்கம் போல நெருங்கிப் போர்
செய்தான்.

தென்னிலங்கை - பிறிதினியைபு நீங்காத விசேடணம்.
மூன்னும் பாலி மாலியவான் சுமாலியென்னு மரக்கர்
களால் அரசாளப்பட்டமையின் "எங்குலத்தவர்க்குரிய
தென்னிலங்கை!" என்றான்.

6. இ-ள் : செறுத்து வென்றபின்-கோபித்து வெற்றி கொண்ட பின்பு, திறலால் புட்பக விமானமும் பறித்து - தனது வலிமையினால் புட்பக விமானத்தையுங் கவர்ந்து, மா இலங்கை நகரையும் தன் அடிப்படுத்தி - பெரிய இலங் காபுரியையுந் தனதாட்சியின் கீழ்ப்படுத்தி, வெறுத்து- பகைத்து, விண்ணவர் முனிவரர்க்கு நொந்திட இன்னல் உறுத்தி - தேவர்களுக்கும முனிசிரேஷ்டர்களுக்கும் நோவுறும் வண்ணம் துன்பத்தை யழுந்தச் செய்து இலங்கையில் அரசியல் உஞற்றி வைகினன் - இலங்காபுரியி லரசு செய்து கொண்டிருந்தான்.

பறித்து, படுத்தி, வெறுத்து, உறுத்தி
உஞற்றி வைகினனென் றியையும்.

7. இ-ள் : தெரியும் சிற்பநூல் வல்லவன்-(வேதாங் கமாறனு ளொன்றாக) தெரிந்தெடுக்கப்படுஞ் சிற்ப சாஸ்திரத்தில் வல்லவனும், செய்தொழில் மனத்தால் புரியுங் கம்மியன் - (கரங்களினால்) செய்யுந் தொழில்களை மனத்தினாற் செய்யுங் கம்மியனுமாகிய, மயன் தரும் புத்திரி மந்தோதரி என் நாமியை - மயனென்பவன் பெற்ற புத்திரியாகிய மந்தோதரியென்னும் நாமத்தையுடையவளை, இராவணன் தன் மனைவாழ்விற்கு உரியளாம் என - இராவணன் தனதில் வாழ்க்கைக்கு உரியவளாகுமென்று கருதி, உவப்பால் கடிமணம் புணர்ந்தனன் - மகிழ்ச்சியோடு புதிதாகிய மணத்தைச் செய்தான்.

8. இ-ள் : மாது அவள் வயிற்றிடை ஒரு மகன் வந்தான் - மந்தோதரியென்னு மந்தப் பெண்ணினது வயிற்றின்கண்ணின்று மொரு புத்திரன் பிறந்தான், மீதுபோதும் முகிலாமென முழங்கலால் - (அந்தப் புதல்வன்) ஆகாயத்திலுலாவுகின்ற மேகம்போல் முழங்குதலினால், மேகநாதன் என்ற ஓர் நாமமும் - மேகநாதனென்ற ஒரு பெயரையும், வலாரியை வென்று ஓதும் இந்திரசித்து எனும் நாமமும் உற்றான் - இந்திரனை வெற்றிகொண்டதனாற் சொல்லப்படும் இந்திரசித்து என்னும் பெயரையும் பெற்றான்.

மற்று ஏ - அசை. து - சாரியை.

9. இ-ள் : தீது மேவிய இராவணன் தனது வெம் திறலால் - கொடுமைகளைப் பொருந்திய இராவணன் தன்னுடைய குரூரமான வலிமையினாலே, பாதலம்புவி முதலிய உலகு எலாம் பயந்து ஏதம் எய்திட வென்று - பாதாளம் பூமி முதலான வுலகங்களி லிருக்கின்ற வெல்லோரு மச்சங்

கொண்டிளைக்குப்படி செய்து வெற்றிகொண்டு, பேர் அழகில் கிளர்ந்த மாதர் தம்மையும் தன் பெருவலியினால் கவர்ந்தான் - பேரழகினாலே விளங்குகின்ற (பல கணங்களிலுமுள்ள) பெண்களையுந் தனது பெருவலியினாலே கவர்ந்து கொண்டான். பாதலம்புவி - ஆகுபெயர்.

10. இ-ள் : ஏசு இல் வேத நூல் சொல்லிய பொருள்களை இகழ்ந்து - குற்றமில்லாத வேத சாஸ்திரங் கூறுகின்றவுண்மைப் பொருள்களை நிந்தித்து, மாசு இல் வேதியர் குலம் எலாம் வருந்திட வாட்டி - களங்கமற்ற பிராமணர் குலம் முழுவதையும் வருத்தமுறுமாறு வருத்தி, வந்து போர்புரிந்து - தேடிவந்து யுத்தஞ்செய்து, வாசவன் தனை மகனொடும் பாசம் கொடுபிணித்தவன் அரும்சிறை படுத்தான் - தெய்வேந்திரனை மகனாகிய சயந்தனென்பவனுடனே கயிற்றினாற் கட்டிச் சகித்தற்கரிய சிறையில் வைத்தான்.

ஏ - அசை. இகழ்ந்து வாட்டி புரிந்து படுத்தானென் றியையும்.

11. இ-ள் : தேவ கோமகன் தருக்களை மணிகளை - தேவர்க்கரசனா மிந்திரனது பஞ்சதருக்களையுஞ்சிந்தாமணி சூடாமணிகளையும், திறல்சேர் ஏவல் ஆளரால் கொணருவித்து - வலிமை சேர்ந்த ஏவலாட்களினாலே கொண்டுவரச் செய்து, மா இலங்கை நகரில் மேவநாட்டினன் - பெரிய விலங்காபுரியி னிலைபெறுமாறு நாட்டிவைத்து, தேவருக்கு இடுக்கணும் விளைத்தான் - (அம்மட்டோ) வானவர்களுக்குத் துன்பத்தையுஞ் செய்தான், பாவகாரிகள் பிறர்படுதுயரம் பார்ப்பரோ - பாவத்தைச் செய்பவர்கள் பிறர்படுகின்ற துன்பத்தை (பொருட்படுத்தி) நோக்குவார்களோ.

ஓ எதிர்மறை, நாட்டினன் முற்றெச்சம் நாட்டி விளைத்தனென்றியையும், பொருளையும் கவர்ந்தானென்பார் "இடுக்கணும் விளைத்தான்" என எச்சவும்மை கொடுத்தார். இச் செய்யுள் வேற்றுப் பொருள்வைப் பென்னுமணி.

12. இ-ள் : அன்னகாலையில் - (இராவணன் தீமை செய்துகொண்டுவரும்) அந்தக்காலத்திலே, வருந்தியதேவர்-துன்பமடைகின்ற இந்திரன் முதலான வானவர்கள், அயனை துன்னி - பிரமதேவரிடத்து வந்து, அன்னவன் கொடுமைகள் யாவையும் சொன்னார் - அந்த இராவணன் தங்களுக்குச் செய்யாநின்ற கொடுமைகளை யெல்லாங் கூறினார்கள், பன்னும் நான்மறை கிழவனுங் கேட்டு உளம்பரிந்து - பாராயணஞ் செய்கின்ற சதுர்வேதங்கட்குரியரான பிரமதேவரு மவற்றைக் கேட்டு மனமிரங்கி, பின்னர் - பின்பு, வானவர்

தன்னொடும் பின்வரச் சென்றான் – தேவர்கள் தன்னோடும்
பின்னே செல்ல (தாவெழுந்து) செல்வாராயினர்.

அன்ன அகரச்சுட்டின் மரூஉ. பிறவுமன்ன.

13. இ–ள்: சென்று பாற்கடல் சேர்ந்தனன்–போய்த்
திருப்பாற்கடலை யடைந்து, செம்பொருள் வாய்ந்து நன்று
மேவிய பலவித துதிகளும் நவின்றான் – செம்மையான
பொருள்களினாலே வாய்ப்புற்று நன்கமைந்திருக்கும் பல
வகைத்தான தோத்திரங்களையும் கூறிநின்றார், வென்றி மாய
னுந் துதிகளான் மிக மனம் மகிழ்ந்து – வெற்றியையுடைய
மகாவிட்டுணுமூர்த்தியும் (தனக்குக் கூறிய) தோத்திரங்களி
னாலே மிகவு முள்ளக் களிப்படைந்து, இன்று நீ வரும் கார
ணம் யாது என்றான் – (பிரமனே) இன்றைக்கு நீ என்னி
டத்தில் வந்த காரணம் யாதோவென்று வினவினார்.

சேர்ந்தனன் முற்றெச்சம். ஏ கொல் அசைகள்.

14. இ-ள்: செய்ய தாமரைக் கிழவனும் – செந்தா
மரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவரும், (விட்டுணு
மூர்த்தியை நோக்கி) ஐய! தேவர்கள் முனிவர்கள் நைய –
ஐயனே தேவர்களும் முனிவர்களும் வருத்தமுறும்படி, இரா
வணன் செய்திடுந் தீங்கு எலாம் நவில வந்தனன் – இராவ
ணன் செய்கின்ற கொடுமைகளை யெல்லாம் தங்களிடத்தில்
சொல்லும்வண்ணம் வந்தேன், எந்தை நின்னருள் சிறிது
உண்டேல் – எமது தந்தையே உமது திருவருள் சிறிதாயினு
மிருக்குமேயாயின், உய்தி கூடுவம் – உய்தலைப் பெறுவேம்,
எமைக் காத்தருளென உரைத்தான் – அடியேங்களை இரட்
சித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார்.

தாமரை ஆகுபெயர்.

15 இ–ள். அந்த வாசகங் கேட்டருள் அச்சுத
மூர்த்தி - (பிரமன் கூறிய) அந்த வார்த்தையைக் கேட்ட
ருளிய மகா விட்டுணுமூர்த்தியானவர், மைந்த நீ பயங்கொண்
டது இனிப்போதும் - மகனே நீ (இராவணன் செய்யும்
கொடுமைகளுக்காக) அச்சமடைந்தது இவ்வளவோடமை
யும், இந்த வானவர் தம்மொடும் செல்லுதி - நீ இந்தத்
தேவர்களோடும் செல்வாயாக, யாமே சிந்தை நொந்திடும்
தேவரைப் புரப்பது திண்ணம் - யாந்தாமே மனத்துயரமுறு
கின்ற வானவர்களை யிரட்சிப்பது நிச்சயம்.

மற்று அசை. ஏ பிரிநிலையோடு தோற்றமுமாம்.

16. இ–ள்: வெய்ய இராவணன் கொன்றிட - தீயவ
னாகிய இராவணனைக் கொல்லும் பொருட்டாக, விரைவினில்-
சீக்கிரத்தில், யாமும் வையம் காத்திடும் தசரதன் மைந்த

னாய் வருவேம் - யாமும் பூமியைப் பரிபாலனஞ் செய்கின்ற
தசரதனுக்கு மகனாக வவதாரஞ் செய்வேம், பொய்யனும்
அவன் தன்னொடும் போர்புரி காலை - (அங்ஙனமவதாரஞ்
செய்து) அசத்தியனாகிய இராவணனோடும் யுத்தஞ் செய்
யுங் காலத்தில், துய்யவானவர் எமக்கு அருந்துணை செய்
யும் பொருட்டு - சுத்தமான தேவர்களெமக்குப் போரிலரு
மையான துணைசெய்யும் பொருட்டாக.

இச்செய்யுள் பிற செய்யுளுடன் சென்று முடிதலிற்
குளகம். குளகம் "பலபாட்டொருவினை கொள்ளும்". பிருங்கு
முனிவரும் சலந்தராசுரன் மனைவியான விருந்தை யென்ப
வளுமிட்ட சாபதோஷ வனுபவிப்புகள் சமீபித்தமையானும்,
தேவர்களுக்கும் இராவணன் செய்யுங் கொடுமையி னனு
பவிப்பு நீங்குங் காலம் சமீபித்தமையானும் "விரைவினில்
தசரதன் மைந்தனாய் வருவேம்" சத்துருக்களை வேறற்குந்
தாமுயிர்பிழைப்பதற்கு மின்றியமையாத துணை வேண்டிற்
றென்பார் "அருந்துணை செய்யும் பொருட்டு" என்றுங்
கூறினார்.

17. இ – ள்: ஒன்றும் தம் தம் கூறுகளுற்றிட - ஒன்
றித்திருக்கும் தங்கடங்கள் கலைகள் பொருந்த, துன்புறு
வானர வடிவொடும் - நெருங்கிய குரங்கு ரூபங்களுடனே,
புவியில் தோன்றிடக் கடவர் - பூமியிற் பிறக்கக்கடவர், என்று
நாரணன் பிரமனுக்கு இயம்பினன் மறைந்தான் - என்றிவ்
வாறு மகா விட்டுணுமூர்த்தி பிரமதேவருக் கருள்புரிந்து
மறைந்திருந்தார், அன்று - அத்தினத்தில் வானவர் பின்வர
பிரமனும் அகன்றார் - தேவர்கள் தம்பின்னே வரப் பிரம
தேவரும் போயினார்.

இயம்பினன் முற்றெச்சம், தத்தம் வலித்தல் விகாரம்.
கூறுகளை பொருட்டுத் தோன்றிடக் கடவர் என மேலைச்
செய்யுளோடு கூட்டி முடிக்க.

18. இ – ள்: பின்னர் பின்பு, இந்திரன் வாலியை
பெற்றான் - தேவேந்திரன் வாலியைப் பெற்றான், சூரியன்
வலிமை துன்னும் சுக்கிரீவன் தனைப் பெற்றான் - சூரியன்
வலிமையமைந்த சுக்கிரீவனைப் பெற்றான், அன்ன வாயுவும்
அனுமனைப் பெற்றான் - அந்த வாயுதேவனு மனுமானைப்
பெற்றான், அதற்கு முன்னர் - அனுமன் பிறப்பதற்கு முதல்,
நான்முகன் தந்திட - பிரமதேவர் தர, சாம்பவன் மூளைத்
தான் - சாம்புவந்தன் பிறந்தான்.

அவர் தத்தமவதாரங்கட்குத் தாங்களே தந்தையு
மாயின ரென்றுய்த்துணர்க வாயுகலையு முருத்திரகலையுங்
கூடிப் பிறந்தவன் அனுமன்.

35714

19. **இ-ள் :** ஏனைவானவர்-ஒழிந்ததேவர்கள் ஏனைய குரங்குகளாகி – ஒழிந்த வானரங்களாகி, மானிலத்திடை வந்தனர் - பெரிய மண்ணுலகின்கட் டோன்றினார்கள், வாலி - (இவர்தம்முள்) வாலியென்பவன், அங்குச் சேனைகாவலன் ஆகியே – அந்த வானரப் படைகளுக் கரசனாகி, கிட்கிந்தை யான மாமலை சென்று - கிட்கிந்தையாகிய பெரிய மலையிற் போய், அரசியல் செலுத்தி வைகினன் - அரசாட்சியை நடாத்திக்கொண் டிருந்தான்.

20. இ - ள் : அன்னகாலையில் - அந்தக் காலத்தில், அயோத்திவாழ் தசரதன் என்னும் மன்னவன் - அயோத்தியாபுரியில் வீற்றிருக்கும் தசரதனென்னுஞ் சக்கரவர்த்தியானவர், கோசலை சுமித்திரை மாதுகைகேயி என்னும் மூவரும் தேவியர் என்னினும் – கௌசலை சுமித்திரை கைகேயி என்கின்ற மூவரும் மனைவியாயிருந்தும், புதல்வர் இன்மை நாடியே – புத்திரப்பேறில்லாமையை நினைந்து, இருந்துயர் பெருங்கடல் படிந்தான் – பெரிய துன்பமாகிய பெருங்கடலில் மூழ்கினான்.

சக்கரவர்த்தி யாவினீங்கினும் அரசுக்குரிய தலைமகனாகிய ஸ்ரீராமன் காட்டுக்குச் சேறலையுந் தன்மகன் பரதன் முடி சூடுதலையுங் கைவிடாத வன்கண்மையுடையவளென்பது தோன்ற "மாது கைகேயி" என்றார்.

21. இ - ள் : உரியமந்திரி சுமந்திரன் உரைத்தசொல்படியே–உரிமையுடைய மந்திரியாகிய சுமந்திரனென்பவன் சொன்னசொற்படியே, அரியவன் கலைகோட்டு மாமுனிவனை அழைத்து – அருமையான தவவலிமையுடைய கலைக்கோடனென்னும் பெரிய முனிவரை அழைத்து, குரு வசிட்டனுங் கூடிட - தமது குருவாகவுள்ள வசிட்டமுனிவருந் துணையாக, குமரரைப் பயக்கும் தசரதன் – சக்கரவர்த்தியானவன், வேள்வியை பிழையறச் செய்தான் – பெரிதான புத்திர காமேட்டி யாகத்தைக் குற்றந் தீரச் செய்தார்.

சொற்படி அழைத்துக் கூடிடச் செய்தான் என்றியையும். அறுபதினாயிரம் வருடம் தனக்கு ஆட்சிப்பெற்ற மந்திரியென்பதுபோதர உரியமந்திரி சுமந்திரன் என்றார் என்க.

மானுடரை விலங்கென்று கருதுமத்துணைப் பெருஞானியுங் கோசலநாட்டி னெல்லையில் வந்தளவில் மழை பொழியுமாறிருந்த வற்புதப் பெருந்தவமுடையவரு மிவரென்பார் "அரியவன் கலைக்கோட்டு முனி'யென்றார்."

22. இ - ள் : உற்ற வேள்வியில் - செய்த யாகத்தினின்றும், ஒரு பூதம அவியொடு உதித்து - ஒரு பூதமானது தேவருணவோடும் தோன்றி, அவியினைக் கொற்றவன் கரத்துக் கொடுத்து - தேவருணவைச் சக்கரவர்த்தி கையிற் கொடுத்து, நீ இதனை உற்றதேவியர் மூவர்க்கும் உதவு எனச் சொல்லி - நீ இந்தத் தேவருணவை உரிமைபெற்றிருந்த மனைவிமார்கள் மூவர்க்குங் கொடுவென்று சொல்லிக் கொடுத்து, அ வேள்வியில் கொம்மென மறைந்தது - அந்த யாகத்தில் சீக்கிரமாக மறைந்துவிட்டது.

மற்று, ஐ, அன்று, ஏ அசைகள்.

23. இ - ள் : மன்னன் அவியினை ஈந்திட - சக்கரவர்த்தி தேவருணவை "கூறு செய்து" கொடுக்க, மனைவியர் உண்டு - தேவிமார்கள் மூவருமருந்தி, அன்னகாலை - அப்பொழுதில், அவன்தனால் கருவினை அடைந்தார் - சக்கரவர்த்தியினால் கருப்பங் கொண்டார்கள், பின்னர் நாளடைந்து - பின்பு பத்து மாசமும் நிரம்பி, கோசலை இராமனைப் பெற்றாள் - கோசலாதேவி ஸ்ரீ ராமபிரானைப் பெற்றனள், பன்னுகேகயன் புதல்வியும் பரதனைப் பெற்றாள் - சொல்லப்பெற்ற கேகயதேசத்தரசன் மகளாகிய கைகேயியும் பரதனைப் பெற்றனள்.

ஏ அசை, கர்ப்பாதானத்திற்குக் கணவன் சையோகமும் வேண்டிற்றென்பார் அவன்றனாற் கருவினையடைந்தார் என்றார்.

24. இ - ள் : சுமித்திரை - சுமித்திரை யென்பவள், இகல் இலக்குவன் சத்துருக்கன் என யாரும் பகரவந்திடும் இருவரைப் பயந்தாள் - வலியுடைய இலக்குமன்னன் சத்துருக்கன் என்று எல்லோரும் எடுத்துச் சொல்லும்படியுள்ள இரண்டு புத்திரரைப் பெற்றனள், மகிதலந்தனில் - மண்ணுலகத்தில், மைந்தர்கள் நால்வரும் வளர்ந்து - இந்தப் புதல்வர்கள் நால்வரும் "பூர்வபக்கச் சந்திரன்" போல வளர்ந்து, சகல கல்வியும் வல்லராய் தயங்கினர் - எல்லாக் கலைஞானங்களிலும். வல்லுநராகி (தமக்கிலக்கில்லை யென்னுமாறு) விளங்கினார்கள்.

அன்று, ஏ, அசை. வேதாகம புராணங்களினும் தனுர்வேதம் முதலியவற்றினும் வல்லவராயினா ரென்பார் சகல கல்வியும் வல்லராய் என்றார்.

25. இ - ள் : படை கை காதி காதலன் கோசிகன் - விற்படையைப்பிடித்த கையையுடைய காதிமகாராசாவின்புதல்வனாகிய விசுவாமித்திர முனிவர், அவண் கடிது அடைந்து -

அயோத்தியில் சீக்கிரமாகவந்து, ஓதும் என்பெருவேள்வியை
ஊறுகள் அகற்றி பாதுகாத்திட - வேதம் கூறுகின்ற எனது
பெரியயாகத்தை (பிறரால்நேரிடுகின்ற) விக்கினங்கள்நீக்கிப்
பாதுகாக்கும்பொருட்டு, இராமனை தருகஎன - நிலைதுசேட்ட
குமாரனாகியஸ்ரீராமனைத்தரக்கடவையென்று, தாதையாகிய
தசரதன்தன்னிடம் கேட்டான் - தந்தையாகிய சக்கரவர்த்தி
யிடம் (அவன்றன் உயிரைக் கேட்பதுபோலக்) கேட்டார்.

படக்கை என்னுமடை காதியையேயன்றிக் கோசிகனையும்
விசேடித்தது.

26. இ - ள்: உரிய மைந்தனைப்பிரிந்திட உளம்இலன்
எனும்-(சக்கரவர்த்தியானவர் தமதுரிமைக்கு) உரியவனாகிய
ஸ்ரீராமபிரானைக் கொடுப்பதற்கு மனமில்லாதவராகஇருந்த
போதும், குருவின்வாசகம் மறுக்க அஞ்சினன் - தங் குருவா
கிய வசிட்ட முனிவரது வாக்கை மறுப்பதற் கஞ்சினவராய்,
கொடுபோய் எரிகொள்வேள்வியைகாக்குமாறு— அழைத்துக்
கொண்டுபோய் அக்கினியிட்டுச்செய்யும் யாகத்தைக் காக்கும்
வண்ணம், கரியமைந்தனை இலக்குவனோடும் கோசிகன் கரத்
தில்கொடுத்தான்-ஸ்ரீராமபிரானை இலக்குமணனோடுங்கூட்டி
விசுவாமித்திர முனிவருடைய கையில் (அடைக்கலமென்று
சொல்லிக்) கொடுத்தனர்.

அஞ்சினன் முற்றெச்சம். இராமனோ இளைஞன், யானே
வருகின்றேனென்று மறுக்கவும் தீங்கு விளைக்குமாறெழூந்
திருந்த முனிவரின் கோபத்தைக்கண்டு பிள்ளைகட்கு நன்மை
வருங்காலத்தில் மறுக்கின்றாயோவென்று கூறிய குருவின்
வாக்கின்படி கொடுத்தனரென்பார் "குருவின்வாசகம் மறுப்
பதற்கஞ்சினன்" என்றும், கோசிகன் வாக்கினும் குருவின்
வாக்கைக் கடத்தல் அதி பாதகமென்பார். "மறுத்திடான்
என்னுதஞ்சினன்" என்றுங் கூறினர்.

27. இ - ள்: கொடுத்த மைந்தரை - (சக்கரவர்த்திகை
யடையாகக்)கொடுத்தஇராமலக்குவரை, கோசிகன்கொண்டு
போய்-விசுவாமித்திரமுனிவர் தன்னுடனழைத்துக்கொண்டு
போய், வெற்றியடுத்த பல்வகை வித்தைகள் அளித்தனன் -
வெற்றியைத்தருதற்குரிய பலவகைத்தாகிய வித்தைகளையுப
தேசித்துக் கொடுத்தார், இராமன் - (அந்தச் சமையத்தில்)
ஸ்ரீராமபிரான், முனி சொல்லால் - விசுவாமித்திரமுனிவரது
சொல்லைக்கொண்டு, தடுத்துவந்து எதிர் தாடகைதனை - வழி
மறித்துவந்தெதிர்த்த தாடகையென்கிறவரக்கியை, வடித்த
அம்புதொட்டு ஆருயிர்நீத்திட வதைத்தான் - கூரிய பாணத்
தைப்பிரயோகித்து அரிதாலவுயிர்நீங்கும்படிகொன்றனன்.

பெண்ணைக்கோறல் பாவமும் பழியுமென் றிராமபிரான்
வாழாவிற்ப, பெண்ணன்று கொல்லுகவென் றம்முனிகூறக்
கொன்றனரென்பார் "முனிசொல்லால்" என்றார்.

28. இ - ள்: கோசிகன் - விசுவாமித்திரமுனிவர், கரு
தும் மைந்தர்கள் தம்மொடும் காமன் ஆச்சிரமம் மருவி - தக்
கோரென்றெண்ணப்படும் இராம லக்குவர்களோடும் காம
னாச்சிரமமென்னுமிடத்தையடுத்து, மகம்செய-வேள்வியைச்
செய்யாநிற்ப, அரக்கரும் வந்தார் (அவ்வேள்வியை யழித்
தற்பொருட்டு) தாடகையின்புதல்வர்களாகிய அரக்கர்களும்
வந்தார்கள், இராமன் இலக்குவனோடும்-ஸ்ரீராமபிரான் இலக்
குமனனோடும், வரு சுவாகுவை பிறர்தமை வதைபுரிந்து -
(அங்ஙனம்) வருகின்ற சுவாகுவையு மொழிந்தோர்களையுங்
கொன்று, எரிகொள் வேள்வியைக் காத்தனர் - அக்கினியிட்
டுச்செய்யும் யாகத்தைப் பாதுகாத்தனர்.

அரக்கரும் என்பதன்கணும்மை இறந்ததுதழீயவெச்சம்.
தாடகையின் புதல்வர்களாகிய சுவாகு மாரீசனென்னு மிரு
வரில் சுவாகுவிறக்க மாரீசன் தப்பியோடினனென்க. இதனை
"முன்னமும் மகவாய்வந்த மூவரி லொருவன்போனான், அன்
னமாரீசனென்றே யயிர்த்தன னிதனை யையை" என்னும்கம்ப
ராமாயணச் செய்யுளானறிக.

29. இ - ள்: ஆக்கும் மாதவகோசிகன்-வீடுபேற்றைத்
தரும் மகாதவத்தையுடைய விசுவாமித்திரமுனிவர், காக்கும்
வேள்வியை முடித்தபின் - இராம லக்குமனனரால் காத்துக்
கொடுக்கும் யாகத்தைச்செய்து முடித்த பின்பு, காளையரோ
டும் இராசகுமாரர்களோடும், அணிமதில் மிதிலைநோக்கி ஏகி
னன்-அழகிய மதில்வளைந்த மிதிலாபுரியைநோக்கிச் சென்ற
னர் வழியிடை—சென்றுகொண்டிருக்கும்மார்க்கத்தில், பார்க்
குமாறு-எத்தகையினரும் கண்ணூன்றிப் பார்க்கும்வண்ணம்,
நூதனமாக-அற்புதத்தைஉடையதாக, ஒருகல்லுரு படிமேல்
கிடந்தது - ஒரு கருங்கல்லு வடிவம் பூமியிற் கிடந்தது.

ஆக்கும் என்னுமடை தவத்தை விசேடித் திரடையுங்
கோசிகனை விசேடித்தன.

சிருட்டிப்புச் செய்யுமென்பது பொருளாயின், ஆக்கும்
கோசிகன் மாதவக் கோசிகனென தனித்தனியியையும். கர
சரணாதி யவயவங்களுடனொரு பெண்வடிவங் கல்லாகக் கிடந்
தமையின் "நூதனமாகப் பார்க்குமாறொரு கல்லுருக் கிடந்
தது என்றா ரென்க"

30. இ – ள்: காணுங் கல்லினை - நூதனமாகத்
தோன்றுகின்ற கல்லை, இராகவன் கழலடிப்பொடியால்
நாணும் பெண்ணுரு ஆக்கி - ஸ்ரீ ராமபிரான் தமது கழல
ணிந்த பாததூளியினால் நாணமுறுகின்ற பெண்ணுருவாகும்
படி செய்து, இது என் என - (முனிவரை நோக்கி இந்த வற்
புதமிருந்தவாறு) என்னை என்று வினவ, நன்மை மாணுங்
கோசிகன் - பிறர்க்குச் செய்யும் நன்மைகளினாலே மாட்சிமை
தங்கிய விசுவாமித்திர முனிவர், இவள் கோதமன் மனைவி -
(பிள்ளையே) இந்த மாது கௌதமமுனிவரின் பத்தினியாகிய
அகலிகை, பேணுங் கற்பு இழந்து இவ்வுரு பெற்றனள் என்
றுன் (தம்முயிரினும்) பாதுகாக்கின்ற கற்பை யிழத்தலால்
(அம்முனிவனிட்ட சாபத்தினாலே) இக் கல்வடிவத்தைப்
பெற்றனளென்று கூறினார். மற்று அசை இழந்து ஏதுப்
பொருட்டு.

இந்திரனோடு களவொழுக்கஞ் செய்யக்கண்ட கௌதம
முனிவர் கருங்கல்லாகுமாறு சபித்து, விட்டுணுவின் அவதார
மாகிய ஸ்ரீ ராமன் ஒருகாலத்தில் இந்த மார்க்கமாக வரும்
பொழுது அவனுடைய பாதங்களால் தீண்டப்பட்டுப் பழைய
வடிவத்தைப் பெறுவாயென்று இச் சாப நிவிர்த்தியையுங்
கூறினரென்றறிக.

31 இ–ள்: அந்த மாதினை அம்முனி இடத்தில் அருளி-
(சுயவுருவைப்பெற்ற) அந்த வகலிகையை யந்தக் கௌதம
முனிவனிடத் தொப்புவித்து, மூன்றும் மூவரும மிதிலையை
யடைந்தனர் - (விசுவாமித்திரன் ஸ்ரீ ராமபிரான் இலக்கு
மன்னனென்னும்) முதன்மைபெற்ற மூவரும் மிதிலாபுரியில்
வந்தார்கள் முன்வே வந்த வில்லினை இராகவன் வளைத்த
னன் - அப்பொழுதிற் சனகராசன் கட்டளைப்படி தனக்கு
முன்பாக (கிங்கரர்களாற் சுமக்கப்பட்டு) வந்த கோதண்ட
மென்னும் வில்லை ஸ்ரீ ராமபிரான் வளைத்தார், சனகன் - சனக
ராசன், (தாயதமின்றிச்) சீதை தன் திருமணச் செய்கை
சிந்தைகொண்டனன் - தன்புத்திரியான சீதாபிராட்டியாரின்
றிருமணத்தின் செயலை நடாத்தும் வண்ணஞ் சிந்தித்தான்.

முன்னே வந்தவில் என்பதற்கு முன்னே சீதாதேவி
யுடன் தோன்றிய வில்லெனினுமமையும்.

32 இ – ள்: தூதர் சென்றனர் மாமண செய்தியைச்
சொல்ல- தூதுவர்கள் (அயோத்தியா முதலான தேசங்கடோ
றுஞ்)சென்று மகத்துவமான திருமண மங்கலச் செய்தியைக்
கூறித் தெரிவிக்கத், தாதையாகிய தசரதன் முதலியோர்
தாமும் - தந்தையாகிய தசரதச் சக்கரவர்த்தி முதலானவர்

களும், ஏனும் மற்றைய வேந்தரும் - (தகுதியுடையரென்று)
சொல்லுகின்ற மற்றுமுள்ள வரசர்களும் பிறரும் வந்து -
(அரசரையல்லாத) பிறரும் வந்து வந்து, தீதுநீங்கிய மிதிலை
மாநகரியில் ஒருங்கு சேர்ந்தார் - பாவமான செயல்களின்றி
யிருக்கும் மிதிலாவென்கிற மகத்துவமான நகரத்திலே
யொருமித்துக் கலந்தார்கள்.

சென்றனர் முற்றெச்சம் பிறர் - அறிஞர் செல்வர் குடிப்
பிறந்தோர். மிதி என்பவனாலுண்டாக்கப்படடது மிதிலை.

33 இ – ள் அநகன் ஆகிய ராமனும் - புண்ணியபுருட
ராகிய ஸ்ரீ ராமபிரானும், அங்கிசான்று ஆக - அக்கினிசாக்ஷி
யாக, சனகன் மாமகள் சீதையை வேட்டனன் - சனகராசா
வின் மகத்துவமான புத்திரியாகிய சீதாபிராட்டியைத் திரு
மணஞ்செய்தனர், இளைய புனிதர் மூவரும் - தம்பியாகிய பரி
சுத்தமுள்ள (பரதன் இலக்குமன்னன் சத்துருக்கன் என்
னும்) மூன்றுபெயரும், தங்கள் மனம் உவந்திடும் மங்கையர்
மூவரை - தங்கள் மனம் விரும்புகின்ற மாதர்கள் மூவரை,
பொருந்தித் தனித்தனி வேட்டனர் - சம்மதித்து வேறு
வேறாக மணஞ் செய்தார்கள்.

சனகராசாவின் தம்பி குசத்துவசனின் புத்திரிகளான
மாண்டவியைப் பரதனும், ஊர்மிளையை இலக்குவனும்,
சுருதி சீர்த்தியைச் சதத்துருக்கனும் முறையே மணந்தார்க
ளென்றுணர்க

34. இ – ள்: வேட்ட மைந்தரும் தந்தையும் - (இவ்
வாறாக) மணம் புரிந்த புதல்வர்கள் மூவருந் தாதையான
தசரதரும், மிதிலையில் சனகன் பூட்டும் அன்பினுக்கு உரிய
ராய் சில பகல் போக்கி - மிதிலாபுரியில் சனகராசன் புணர்த்
திப் பாராட்டு மன்பினுக் குரிமையுடையராயிருந்து, சில
தினங்கள் கழித்து, கூட்டம் எய்திய கொடிமதில் அயோத்
தியை எண்ணி - கூட்டமாகப் பொருந்திய கொடிகள் விளங்
கும் மதில்வளைந்த வயோத்தியாபுரியை நினைந்து, ஈட்டம்
ஆதிய கிளையொடும் எழுந்தனர் போனார் - திரளான ஞாதியர்
முதலான சனங்களோடு பிரயாணமாகிச் சென்றார்கள்.
எழுந்தனர் முற்றெச்சம்

35- இ–ள்: எழுந்துபோதரும் வழியிடை - (இங்ஙனம்)
பிரயாணமாகிச் செல்லுகின்ற மார்க்கத்தில், எதிர்த்துத் தன்
வீரம் மொழிந்து தோன்றிய - எதிர்த்துத் தனது வீரத்தைக்
கூறிக்கொண்டுதோற்றிய, பரசுராமன் வலிமுற்றும்அமிழ்ந்து
போதர - பரசிராமரது வலிமை முழுது மழிந்துபோகும்
வண்ணம், இராகவன் வென்றனன் - ஸ்ரீ ராமபிரான் வெற்றி

கொண்டார், யாவரும்சென்று – எல்லோரும்போய், அயோத்திச் செழுந்தராதலம் அடைந்தனர் - அயோத்தி யென்னுஞ் செழித்த புண்ணிய பூமியைச் சேர்ந்தார்கள்.

36. இ - ள்: இராகவன் சீதை வனிதையோடு மனமகிழ்வு ஆகி யினிதை வாழும்நாள் - ஸ்ரீராமபிரானனவர் சானகியென்னும் பெண்மணியோடு மனம்மகிழ்ந்து அயோத்தியாபுரியில் வாழ்ந்துவரும்நாட்களில், பரதன் மாமனை காணுதல்வேண்டி - பரதன் தன்மாதுலனாகிய யுதாசித்தைக் காணுதலை விரும்பி, நனி துலங்கிய கேகயநாட்டினை நோக்கி இனிது சென்றனன் - (வளப்பங்களினாலே) மிக விளங்கிய கேகய நாட்டைநாடி இனிதாகச்சென்றான், இளவலும் போனான் – (அவனுடன் கூட) இளைஞனாகிய சத்துருக்கனும் போயினான்.

அயோத்தியாகாண்டம்

37 இ - ள்: தெவ்வலி யடக்கும் வேந்தன் – சத்துருக்களின் வலியை யடக்குகின்ற சக்கரவர்த்தியானவர், முன்னம - முன்னாளில், எவ்வரமெனினும் – எவ்வகையான வரமென்றாலும், இரண்டு வரம் ஈவேன் என்ன செப்பிய வார்த்தை–(நீகேட்ட) இரண்டு வரங்களைத் தருவேனென்று சொன்ன வாக்கை, கைவரும் சூழ்ச்சிமிக்க கடியவள் கூனி சொல்லால் - கைவந்த வுபாயங்களில் மேற்பட்ட கொடியவளாகிய கூனியினது சொல்லைக்கேட்டு, கைகேயி எண்ணி – கைகேயி (அப்பொழுதில்) நினைந்து, அவ்வரம் இரண்டும் கேட்க அமைந்து நின்றாள் – அந்த வரங்களிரண்டையும் கேட்க வாயத்தமாகி நின்றாள்.

கூனி – மந்தரை. வேந்தன் செப்பியவார்த்தையை கூனி சொல்லாலெண்ணியென எண்ணுதற்கு கூனியின் சொல்லைக் காரணமாக்குக; சம்பரனை வெற்றிகொண்டகாலத்தில் தேர் செலுத்திக் கொடுத்த திறமையையுடைய கைகேயிக்கு நீ கேட்டகாலத்தில் இரண்டு வரங்களைத் தருவேனென்று சக்கரவர்த்தி சொல்லியிருந்தாரென்றறிக

38 இ – ள்: இரக்கம் இல்லாக் கேகயன் புதல்வி – சீவகாருண்ணியமில்லாத கேகயத்தரசன் புதல்வியான கைகேயி, கரியவன் காட்டினிற் போகவேண்டும் - ஸ்ரீராமன் (பதினான்குவருடம்) காட்டிற் போயிருக்கக்கடவன், பரதன் இந்த நாட்டினை ஆளவேண்டும் – பரதன் இந்தக் கோசல நாட்டை யரசுசெய்யவேண்டும், நவிலும் இவ்வரம்இரண்டும் வேட்டிடுகின்றேன் – சொல்லப்படுமிந்த வரங்களிரண்டை

யுமே விரும்புகின்றேன், இன்றே தந்தருள என்று வேந்தைக் கேட்டனள் – இன்றைக்கே கொடுத்தருளுமென்று சக்கரவர்த்தியைக் கேட்டனள்.

மாது, ஓ, அசை, வேண்டும் என்பன வியங்கோள். ஆசிரியர் சுருங்கக் கூறுவார் கூறுதொழிந்த காலமும்பிறவும் மேற்போந்த கம்பராமாயணச் செய்யுளிற் காண்க.

“ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாளநீ போய்த்
தாழிடுஞ் சடைக டாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரசனென்றாள்”,

39. இ – ள்: வேந்தனும் வரம் கொடுத்தார் – சக்கரவர்த்தியு மவ்விரண்டு வரங்களையும் கொடுத்தனர், அதனை வீரனும் கேட்டு வாய்ந்திடும் காடுசெல்ல வழிக்கொழும் போதில் – (தனக்குச் சிற்றன்னை கூறிய) அவ்வாக்கைச் ஸ்ரீராமபிரானும் கேட்டு வாய்ப்புற்ற வனத்திற்குச் செல்லப் புறப்படுஞ் சமையத்தில், சீதை தேர்ந்து உடன் வருவேன் என்று சேர்ந்தனள் – (சீதாதேவி கணவன் வனம் போகத் துணிந்தமையை) அறிந்து யானுங் கூட வருவேனென்று சென்று கூடினாள், இளையகோவும் சேர்ந்தனன் - இலக்குமன்னனும் யானும் வருவேனென்று கூடினன், மூன்று பேரும் கானம் நோக்கிச் சென்றனர் - இந்த மூவரும் வனத்தை நோக்கிச் சென்றார்கள்.

40. இ – ள்: வந்த காடுகள் கடந்து – (மார்க்கத்தி லிடையிடையே) வந்த காடுகளைக் கடந்து கங்கை கூடுறும் சிருங்கிபேரகோ நகர் சென்று வைகி – கங்காநதியை யடுத்திருக்கின்ற சிருங்கிபேர மென்னு மிராசநகரிற் போயிருந்து, குகன் என்று ஓது வேடுவன் அன்பில் செய்ய மெய்வழிபாடு - குகனென்று சொல்லப்படும் வேடுவத்தலைவ னன்பினாற் செய்த உண்மையான தொண்டுகள் காரணமாக, கங்குல் ஒன்று நீத்தனர் – நீடித்திருக்கு மிராப்பொழுதொன்றை யரிதிற் கழித்தனர்.

41. இ - ள்: இனி இவண் இருக்கைகொண்டால் - (நாங்கள்) மேல்வரும் நாட்களுக்கு மிவ்விடத்திலிருத்தலைக் கொள்ளுகின், எம்மவர் வருவரென்று – நம்மனோர்கள் (அடிக்கடி) வருவார்களென்று நினைந்து, குனிதரும் வரிவில் வேடன் குகன் கொணர் ஓடம் ஏற்றி - வளைக்கப்படும் வரிந்த வில்லையுடைய வேடனாகிய குகன் கொண்டுவந்த வள்ளத்திலேறி, பனிதருங் கங்கை நீக்கி – குளிர்ச்சியைத் தருகின்ற

கங்காநதியைக் கடந்து, பாங்கினில் பரத்துவாச முனிவரன் சாலை நண்ணி - அதனொரு கரைக்கணுள்ள பரத்துவாசரென்னும் முனிசிரேட்டரது பன்னசாலையையடைந்து, முன் விருந்தாகினின்றார் - சிந்திக்கத்தகும் விருந்தாளிகளாகி நின்றார்கள்.

சக்கரவர்த்தியார் திருக்குமாரரு மருகியுமென்பார் "முன் விருந்து என்றார்." இங்கே பாங்கென்றது கங்கையும் யமுனையும் சரஸ்வதியும சங்கமமாகும் புண்ணிய ஸ்தானமாகிய பிரயாகை. அயோத்திக்குச் சிருங்கிபேரமதி சமீபத்திலிருத்தலின் தம்மவர்களடிக்கடி வந்துகொண்டிருப்பார்களென்று கருதி அதிதூரத்துள்ள வனங்களை நாடிச் செல்பவர் பிரயாகையில் பரத்துவாசரைக் கண்டனரென்பது தாற்பரியம்.

42. இ - ள் : உத்தமன் பரத்துவாசன் ஓதிய வார்த்தை கேட்டு - அதியுத்தமனாகிய பரத்துவாச முனிவர் (இன்னவிடத்தில் சென்றிருங்களென்று) சொன்ன வார்த்தையைக் கேட்டு, சித்திரகூட மென்னும் மலையடைந்தார் - (மூவரும்) சித்திரகூடமென்று சொல்லப்படு மழகிய மலையிற் சென்றிருந்தார்கள், (இஃதிங்ஙனமாக) அதிரு நகரமெல்லாமழுங்குரல் மலிய - அந்த அயோத்தியென்னும் செல்வத்தையுடைய நகரமெங்கு மழுங்குரலே மலியும்பொருட்டு, அந்தப் புத்திரன் செய்கைகேட்டுப் பூபதி உடலம் விட்டான் - தனதாவியாயுள்ள ஸ்ரீ ராமபிரான் வனம்போன செயலைக் கேட்டறிந்த சக்கரவர்த்தியு மிறந்தனர்.

மாது, ஓ அசை புத்திரன் வனத்திற்குச் சென்றானென்ற கூற்றே கூற்றாக சக்கரவர்த்தி இறந்தனரென்பது தோன்ற "புத்திரன் செய்கைகேட்டுப் பூபதி உடலம் விட்டான்" என்றார்.

தசரதன் வேட்டையாடிக்கொண்டு சூரியனஸ்தமிக்கும் மாலைப்பொழுதிலொரு குளக்கரையை யடுத்துவந்து புதருள் மறைந்திருக்கும்பொழுது அக்குளத்தினுள சளசளவென்று ஓரொலி யெழக்கண்டு மிருகந் தண்ணீர் குடிக்கின்றதென்றெண்ணி அவ்வொலிக் குறிப்பின் வழியேவிட்ட அம்பானது தண்ணீர் மொண்டுகொண்டு நின்ற குருட்டு மகாமுனிவரினேகபுத்திரனிற்பட்டு ஊடுருவிச்செல்ல முனிகுமாரன் அலறிக்கொண்டு வீழ்ந்திறந்தான். மனுடக் குரலாக விருந்தமையைக்கேட்ட சக்கரவர்த்தி அவ்விடஞ்சென்றுஅபுத்திபூர்வமாகக்கொடுமை சம்பவித்ததேயென்று கலங்கிச் சிறுவனை எடுத்துச்சென்று முனிவரின் முன்னிலையில் வளர்த்தி, "ஐயா முனிசிரேட்டரே! அடியேனறியாமற்செய்த குற்றத்தைமன்னிக்கவேண்டுமென்று பலவாறுஇரந்துநிற்ப குருட்டுமகாமுனிவர்

குருடனாகவிருக்கு மெனக்குக் கண்போலிருந்த எனதேகபுத்திரனை யிழந்து புத்திர சோகத்தா லிறக்கு மென்னைப் போலவே நீயும புத்திரசோகத்தா லிறக்கக்கடவையென்று சாபமிட் டுடனே தானு முயிர் துறந்தனர்' அந்தச் சாபமே யிங்குத் தசரதன் மரணத்திற் கேதுவாயிற்றென்றுணர்க.

43. இ - ள் : செழுமிய அமைச்சர் மன்னர் - அவ்விடத்தில் வந்து நெருங்கிய சுமந்திரன் முதலிய மந்திரிமாரும் அரசர்களும், கிட்டிய குருவின் வாக்கால் - வந்து கூடிய குருவாகிய வசிட்டருடைய சொற்படி, சட்டகம் பழுது உறாது தைலத்தில் மாட்டி வைத்து - உடம்பு பழுதடையாமல் எண்ணெய்க்குள் மூழ்குவித்துச் சேமமாக வைத்துக்கொண்டு, பட்டுள கருமந்தேரு - நடைபெற்றிருக்கும் காரியத்தை யாலோசித்து, விரைவினில் வருக என்று - அதி சீக்கிரத்தில் வாருங்களென்று பரதனோடு இளவலுககுத் தூதர் தம்மை விட்டனர் - (கேகயநாட்டுக்குச் சென்றிருந்த) பரதனுடனே சத்துருக்கனுக்குத் தூதுவரை யனுப்பினார்கள்.

44. இ - ள் : தூதுவர் வார்த்தை கேட்டு - (அங்குச் சென்ற) தூதுவர் சொன்ன துக்க வார்த்தையைக் கேட்டு, சுமித்திரை புதல்வனோடும் போதரும் பரதன் வந்து - சத்துருக்கனுடனே சென்றிருந்த பரதன் வந்து புகுந்தன யாவும தேர்ந்து - (இவ்விடத்தில்) நிகழ்ந்த சம்பவம் முழுதையும் விசாரித்துணர்ந்துகொண்டு தாதையார் உடலம் தன்னைத் தைலத்தில் நின்று எடுத்து - தந்தையாரினுடம்பை யெண்ணெயினின்றும் வெளியிலெடுத்து பேதம் இல் கிரியை எல்லாம் பிழையறச் செய்தபின்னர் - விதியோடு மாறுபடாத அபரச்சடங்குகள்முழுதையும் தவறில்லாமற்செய்தபின்னர்.

45 இ - ள் : தாதையை துரியல்போக்கும் தாயினை கடிந்து கூறி - தசரதராகிய தந்தையை மரணத்தில்விட்ட கைகேயியாகிய தாயை (நீ யெனக்காகாத தீயவளென்று சினந்து) விலக்கிப் பேசி, மேதினி ஆளுக என்று வேண்டும் வாசகமும் நீக்கி - பூமியை யாளக்கடவையென்று (கைகேயி) வேண்டிக் கூறிய வார்த்தையையுங் கடிந்து, சோது அறும அரசின் வைக இராமனைக் கொணருமாறு - குற்றந் தீர்ந்த வரசாட்சியைச் செய்திருக்கும் வண்ணம் ஸ்ரீ ராமபிரானையழைத்துவரும்பொருட்டு மா துயரத்தினோடும் வனநெறி மருவினன் - அடங்காத துன்பத்தோடும் வனமார்க்கத்திற் போனான் ஏ - அசை துயர் - ஆகுபெயர்

பின்னர், கூறி நீக்கி கொணருமாறு, மருவினன் என மேலைச் செய்யுளோடு கூட்டி முடிக்க.

46. இ - ள்: சித்திரகூடம் சென்று - (பரதன் சத்துருக்கனோடும் தாயரோடும்) சித்திரகூடமலையில் வந்து தேவியை இளையகோவை அத்தனை அணுகிக் கண்டான் - சீதாதேவியையும் இலக்குமனனையும் ஸ்ரீராமபிரானையுமடைந்து கண்டவனாகி, அடைந்த காரியமும் சொன்னான் - (தந்தையிறந்ததும் தான் கிரியை செய்ததுமாகிய) அயோத்தியில் நிகழ்ந்த விஷயங்களையுங் கூறினான், அத்தனும் அவனை நோக்கி - ஸ்ரீராமபிரானும் பரதனைப் பார்த்து ஐய நீ வந்த செய்கை எத்திறம் என்ன - தம்பி நீ யிங்கே வந்த காரணமெதற்காக என்று வினவ, யான் உன்னைக் கொண்டுபோக என்றான் - யான் தங்களை அழைத்துப்போவதற்காகவென்று கூறினான். கண்டான் - முற்றெச்சம.

தந்தை இறந்ததும் கிரியை யாற்றியதும் முடிவாயினதன்றே. அதுகிடக்க, நீயீண்டுவரவேண்டுவதெதற்காகவென்பார் "ஐய நீ வந்தசெய்கை எத்திறமென்ன" என்றார்.

47. இ - ள்: யாதுரை செயினும் கொள்ளேன் (பரதனே நீ) எந்த வார்த்தையைச் சொன்னபோதினும் யானே கைக்கொள்ளமாட்டேன் தாதை சொல் வழாமல் ஏழிருவருடம் ஈண்டே வாழ்ந்து - தந்தையாரின் வாக்குத்தவறாமல் பதினான்கு வருடம் வரைக்கும் இந்த வனத்திலேயே வாசஞ்செய்து, பின்பு தனிநகர் சேர்வேன் - அதன்மேலொப்பில்லாத அயோத்தியாபுரிக்கு வருவேன், போதும் அ நாள் வரைக்கும் - யான் வரவிருக்கு மந்தநாளளவும், போய் புவி ஆளுக என்று - நீ போய்க் கோசலநாட்டை யரசியற்றக் கடவையென்று சொல்லி பாதுகை இரண்டும் ஈந்தான் - தமது பாதரக்ஷைகளிரண்டையுங் கொடுத்தான், பரதனும் பெற்று வந்தான் - பரதனு மவைகளை வாங்கிக்கொண்டயோத்திக்கு வந்தான்.

புவி ஆகுபெயர். தந்தை சொல்லினும் மிக்க மந்திரமில்லை யென்பார் "தாதைசொல் வழாமல்" என்றும், முத்திநகரங்களுட் டலைநகரென்பார் "தனிநகர்" என்றுங் கூறினார். யானாகச் சிங்காசனத்து வைத் தரசியற்றென்று பாதரக்ஷையைக் கொடுத்தாரென்க.

48. இ - ள்: தந்த பாதுகையிரண்டும் தனித்துணையாகக் கொண்டோன் - ஸ்ரீராமபிரானால் தரப்பெற்ற பாதரக்ஷைகளிரண்டையும் அரசுக்கு ஒப்பில்லாத துணையாகப் பெற்றுக்கொண்ட பரதன், நந்தி கிராமம் வைத்து - (அயோத்தியாபுரியின் ஒருசார்பின்கண்ணுள்ள) நந்திக்கிராமமென்னுமிடத்தில்

ஓராசனம் வகுத்து அதன்மேலவற்றைவைத்து நானிலங்காவல் பூண்டான் - பரந்த பூமியைப் பரிபாலனஞ் செய்தான். (இஃதிங்ஙனமாக) முந்தி அ மலை இருந்தோர் மூவரும் - முன்னமே அந்தச் சித்திரகூட மலையிலிருந்தவர்களாகிய ஸ்ரீராமபிரானும் சீதாதேவியும் இலக்குமனனும், அத்திரிப்பேர் அந்தணன் இருக்கை எய்தி - அத்திரி என்னும் பெயரையுடைய முனிவரது ஆச்சிரமத்தை யடைந்து, அதிதி பூசனையும் பெற்றார் - (அம்முனிவர் செய்யாநின்ற) விருந்துபசாரத்தையும் பெற்றார்கள்

கொண்டோன் வினையாலணையும் பெயர். அம் சாரியை. நாலல் - பரத்தல் குறிஞ்சியதும் முல்லையதும் விகாரமே பாலை யாதலால் நான்குநில மென்பாரு முளர். நந்திக்கிராமம் அயோத்தியிலுள்ள ஓர் சிற்றூர்

ஆரணியகாண்டம்

49. இ - ள்: அத்திரி முனிவன் வைகும் ஆச்சிரமத்தை நீங்கி - (ஸ்ரீராமபிரானும் சீதாதேவியும் இலக்குமனனும) அத்திரி முனிவரிருக்கின்ற ஆச்சிரமத்தினின்றும் அப்பாற்சென்று, தத்து நீர் மிக்க சோலை தண்டகாரணியம்புக்கு - பாய்கின்ற நீர்வளம் மிகுந்த சோலையையுடைத்தாகிய தண்டகாரணியத்தை யடைந்து, மெய்த்தவர் உறையும் சாலை வேறு வேறாகப்போகி - உண்மையான தவத்தையுடைய முனிவர்கள் இருக்கின்ற பன்னசாலைகடோறும் சென்றுசென்று அ தவர் அருளும் பெற்றார் அகத்திய னருளும் பெற்றார் - அந்த அந்த முனிவர்களுடைய ஆசீர்வாதங்களையும் பெற்றார்கள்; (அவைமட்டோ) அகத்தியமுனிவனுடைய ஆசீர்வாதமும்பெற்றார்கள்.

ஆச்சிரமம்-முனிவரிருப்பிடம். பிரித்தோதியது அகத்தியரின் உயர்வு தோன்றற்கென்க. முன் நகரமாயிருந்து பின் காடாயினதென்னுங் குறிப்புத் தோன்ற "தத்துநீர் மிக்க சோலை தண்டகாரணியம்" என்றார்.

முன்னொருகாலத்திலே தண்டகபுரமெனப் பெயரிய நகரத்தை அரசியற்றியிருந்த தண்டகன் என்பவன் புரோகிதரான சுக்கிரன் மகளைக் கற்பழிக்கக் கண்ட சுக்கிரன் 'நீயு மழிந்து இந்நகரமு மழியக்கடவ தென்று சபிக்க அரசனு மழிந்து நகரமு மழிந்து காடாயிற்று.

35714

சிலகாலத்தின் பின் இமையாசலத்தினின்றும் வந்த அகத்தியமுனிவர் இந்தத் தண்டகாரண்யத்திருந்து அங்குள்ளவர்களுக்குச் செந்தமிழ்க் கல்வியை அறிவுறுத்தினரென்பது சரித்திரம்.

50 இ - ள் : இராமன் - ஸ்ரீ ராமபிரான், குடமுனி இடத்து குனி சிலை ஆதி தெய்வப்படைகளும் பெற்று - அகத்தியமுனிவரிடத்தில் வளைக்கின்ற வில் முதலான தெய்வப் படைகளையும் பெற்றுக்கொண்டு, (அங்குநின்றும் அப்பாற் சென்று) நண்பின் பண்புறு சடாயுவின்பால் - நட்புக்குரிய இலக்கணமமைந்த சடாயுவினிடத்தில், மடநலாள் தனை புரக்கும் வாக்கையும் பெற்று - சீதாதேவியை நான் காப்பேனென்று கூறிய நல்ல வாக்கையும் பெற்றுக்கொண்டு, மற்றவரோடும - சீதாதேவியோடும் இலக்குமனனோடும் பஞ்சவடியெனும் இடத்தில் போனான் - (சடாயு சிறகுகளால் நிழல் கொடுத்துக்கொண்டு துணையாய் வர) பஞ்சவடி யென்னுமிடத்திற் போயினர்.

மாது, ஓ அசை. நாடகமாத்திரையான நட்புப்போலாது தசரதனுடன் பிசிராந்தை கோப்பெருஞ்சோழனென்றிவரினுஞ் சிறந்த உண்மை நட்புடையனென்பார் 'நண்பின் பண்புறு சடாயு' என்றார். பஞ்சவடி ஐந்து ஆலவிருட்சங்கள் ஒன்றாகக்கூடி நிற்குமிடம்.

51. இ - ள் : வாவி நீர் சூழும் பஞ்சவடியிடை - வாவியின்கண்ணுள்ள நீர் சூழ்ந்திருக்கும் அந்தப் பஞ்சவடியிலே, ஆவிபோன்று இனிய தம்பி தனது கையால் ஆகிய பன்னசாலை - தனது உயிரையொத்து இன்பத்தைச்செய்யும் தம்பியாகிய இலக்குமனன் தனது கரங்களினாலுண்டாக்கிய பன்னசாலையின்கண், தேவர் தம் துயரம் நீக்க திருவவதாரஞ் செய்தோன் தேவியுந் தானுமாகச் சென்று வீற்றிருந்தான் என்ப - தேவர்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தவராகிய ஸ்ரீ ராமபிரான்; சீதாதேவியுந் தானுமாகச் சென்று வீற்றிருந்தனர் என்று கூறுவர்.

சாலை வீற்றிருந்தானென்றிசையும். பன்னசாலை - இலைவீடு. பதினான்குவருடம் வரைக்கும் உணவும் துயிலுமின்றிப் பிரியாதிருந்தும் காய் கனிகளைக் கொடுத்தும் நற்றுணை புரிந்த தம்பி என்பார். இலக்குமனனை "ஆவிபோன்றினியதம்பி" என்றும். காவற்கடவுளாகிய தாம் மானுடனாகத் தோன்றிய காரணத்தின் காரிய நிகழ்ச்சி இவ்விடத்தில் இதுபொழுதில் ஆரம்பமாகுமென்னுங் குறிப்புத் தோன்றப் பிறிது விசேடணங்கூறாது "தேவர் தந்துயரம் நீக்கத் திருவவதாரஞ்

செய்தோன்" என்றற்பொருட்டாகிய விசேடணங் கொடுத்தும் கூறினர் என்க.

52. இ - ள் : ஆயிடை வைகும் நாளில் - அந்தப் பஞ்சவடியிலே இருந்துவரும் நாட்களில், அரக்கி சூர்ப்பநகை என்னும் தீயவள்வந்து - அரக்க மாதாகிய சூர்ப்பநகைஎன்கின்ற கொடியவள் அங்கே வந்து, செம்மலை கண்டு இச்சைகொண்டாள் - ஸ்ரீ ராமபிரானைப்பார்த்து அவர்மேலாசைவைத்தாள், ஆயவன் மறுத்தான் - (அதற்குடன்படாது) ஸ்ரீ ராமபிரானவர் மறுத்தனர். பின்னர் அநுசனும் மறுத்து நீத்தான் - அதன்மேல் அதுபோலவே) தம்பியாகிய இலக்குமனனும் மறுத்துத் தள்ளிவிட்டார், அவள் சிறிது தூரம்போய் - (இருவரும் கடிந்துவிட்ட சூர்ப்பநகை) சற்றுத் தூரம்போய், மீண்டும் பொருக்கெனப் புக்காள் - மீளவும் சீக்கிரமாக வந்தாள்.

இந்நூலாசிரியர் சுருங்கக் கூறுவாராகலின் "ஆயவன் மறுத்தான்" என்றார் அரக்கரை மானுடர் மணத்தல் பொருத்தமாகாதென ஏதுக்காட்டி மறுத்தாரென்பதை 'வருத்தநீங் கரக்கர்தம்மின் மானுடர் மணத்த லங்காய், பொருத்தமென் றென்றுசாலப் புலமையோர் புகல்வர் என்றான்" என வரும் கம்பராமாயணச் செய்யுளானுணர்க

53. இ - ள் : தீயவள் - (மீட்டும் வந்த) கொடியவளான சூர்ப்பநகை, சீதையைப் பற்றி செல்ல தொடர - சீதாதேவியைப் பிடித்துக்கொண்டு போகுமாறு (அவர் பன்னசாலையை நாடி) தொடர்ந்து செல்லுதலும், இளையகோமான் - அதனைக் கண்ட இளையபெருமானானவர், அந்நாள் காதொடுமூக்கும் சிந்தக் கடிந்தனன் - அந்தச் சூர்ப்பநகையுடைய காதையும் மூக்கையும் உதிரம் சிந்தும்வண்ணம் அரிந்துவிட்டார், பாதகி சென்று சொல்ல (இந்நிகழ்ச்சிகளையெல்லாம்) பாதகச் செயலையுடைய சூர்ப்பநகையோய் முறையீடுசெய்த அளவில், படையொடு கரனும் வந்தான் - (யுத்த சன்னத்தனாய்) படைகளுடனே கரன் என்பவனும் வந்தான், இராமன் - ஸ்ரீ ராமபிரான், தீதுறும் அவனை மற்றைத் தீயரோடு கொன்றான் - தீமையையுடைய கரன் என்பவனை (அவன் தம்பிமாராகிய தூடணன், திரிசிராய் என்ற) மற்றைய கொடியவர்களோடும் கொலை செய்தனன்.

54. இ - ள் : தீயவள் சோகத்தோடும் சென்று - கொடியவளான சூர்ப்பநகை துன்பத்தோடும்போய், தென்னிலங்கை ஆளும் இராவணற்கு நடந்தவை யாவுஞ் சொன்னாள் - தென்னிலங்காபுரியை அரசியற்றுகின்ற அரசனாகிய இராவண

னுக்கு நடந்தவைகள் முழுவதையும் சொன்னாள், தீயவன் யாவுங் கேட்டான் - கொடியவனாகிய இராவணன் அவள் சொன்ன முழுவதையுங் கேட்டு, சீதைமேலிச்சை கொண்டு. சீதாதேவியின்மேலாசைகொண்டு, மாய மாரீசன் தன்னை நீ துணை ஆ வருக என்றான் - மாயங்களையுடைய மாமனாகிய மாரீசனை (நான் செய்யும் வஞ்சனைக்கு) நீ துணையாக வரக் கடவையென்று சொன்னான்.

கேட்டான் முற்றெச்சம்.

ஆக என்பது ஆ என ஈறு கெட்டு நின்றது, யான் தண்டகாரணியத்துச் சென்றபொழுது இராமன் இலக்குமன்னன் என்று இரண்டு மனுடரும் இலக்குமியின் உருவமான சீதையென்றொரு மாது மிருக்கக்கண்டவளை உனக்கேயவையுமென் றெடுக்கச் செல்லுகையில் என்னை இங்ஙனம் அங்க ஈனம் செய்தார்களென்று கூறினாள் என்பார் "நடந்தவை யாவுஞ் சொன்னாள்' என்றார்.

55. இ - ள்: மாயமாரீசன்-(அப்பொழுதில்) மாயங்களில் வல்ல மாரீசனென்பவன், மானுரு எடுததுக்கொண்டு சென்று - பொன்மானின் வடிவங்கொண்டு சென்று, சானகி முன்னே நிற்ப - சீதாதேவியின் முன்பாகநிற்க, சானகி - (அவ்வற்புத மானைக்கண்ட) சீதாதேவி, வாஞ்சைகொண்டு - ஆசைப்பட்டு, ஈது பொன்மான் இதைநீபிடித்துத்தருகஎனகோனடி பணிந்துகேட்டாள் - இஃதுபொன்மானாகும்இதனை நீர்பிடித்துத் தரக்கடவிர் என்று தன் பிராண நாயகரது பாதங்களை நமஸ்கரித்து விண்ணப்பஞ்செய்தனள், கோனும்அங்குஅதன் பின் போனான் - கணவனாகியஸ்ரீராமபிரானும்(பிடித்துத்தருவேனென்று) மானின் பின்னே தொடர்ந்து கொண்டு போயினார்.

இன் - சாரியை. இஃதற்புதமான பொன்மான்என்பதை

"காயம் கனகம் மணிகால் செவிவால்,
பாயும் உருவோ டிதுபண் பெனலால்,
மாயம் எனலன்றி'' என வரும் கம்பராமாயணச் செய்யுளானறிக.

56. இ - ள்: போனவன் கைக்கெட்டாமல் பொன்மான் போதலோடும்-தொடர்ந்துகொண்டுபோனஸ்ரீராமபிரானது கைக் ககப்படாமல் அந்தப்பொன்மான் அதிதூரம்போகவும், அவன்-அந்த இராகவன், யான் இது பிடித்தற்கு ஒல்லாது என்று சரத்தால் வீழ்த்த-யான் இதைப் பிடிப்பதற்கு

முடியாதென்றுகருதிஅம்பைப்பிரயோகித்து விழுத்துதலும், மான் அது-(அவ்வேளையில்)மாயமானாகிய அது, சீதாலக்குமணா எனஉரைத்த சொல்லை-சீதாவேஎன்றும்இலக்குமணாவேஎன்றும் பெயர் குறித்துச் (சொன்ன பேரொலியாக எழுந்த) சொல்லை, சானகி கேட்டு நோவ-சீதாதேவி கேட்டு (தன் பிராணநாயகருக்கு யாதோ தீங்கு நேரிட்டதுபோலும் என்றெண்ணி)மனம்நொந்துகூற, தம்பியும்பின்புபோனான்-இளைய பெருமாளும் (உண்மைகளைக் கூறியுங் கேளாது கடுஞ்சொற்களைக் கூறுதலாற் சகியாதவராகி) தமையன் சென்ற தடத்தை நாடித் தானும் பின்னே போயினார். இன்-சாரியை

கணவன்றன் குரலாகவும் தங்களிருவரையு மவலமாக விழித்தலானும் கலக்கமுற்ற சானகி அண்ணாவினவலக்குரல் கேட்டும் என்னைக் காத்திருக்கின்றாயா வென்று நொந்துகூற தத்துவ ஞானியாகிய இலக்குமன்னன் யானீங்கிருப்பேனாகி லிவள் தீயில் வீழ்ந்திறப்பதும், செல்வேனாகில் அரக்கர் வஞ்சிப்பதும் நிச்சயமேயெனினும், வஞ்சிக்குங்கால் அறக்கடவுளால் ஒருவாறு காக்கப்படவுங்கூடுமெனத்துணிந்து தானுஞ் சானகியைத் தனிமையில் வைத்துப்போயினனென்றுணர்க. இவற்றை,

"ஒருபகல் பழகினா ருயிரை யீவரால்
பெருமக னுலைவுறு பெற்றி கேட்டுநீ
வெருவலை நின்றனை வேறென் யானினி
எரியிடை வீழ்ந்துயி ரிறப்ப லீண்டெனா" எனவும்,

"தாமரை வனத்திடை தாவு மன்னம்போல்
தூமவெங் காட்டெரி தொடர்கின் றானைச்" எனவும்,

"போகின்றே னடியனேன் பொருந்திவந்து கேடாகின்ற"
எனவும்,

"இருப்பனே லெரியிடை யிறப்ப ராலிவர்
பொருப்பினை யானிடை போவனே யெனின்
அருப்பமில் கேடுவந் தடையு மாருயிர்
விருப்பனேற் கென்செய லென்று விம்மினான்" எனவும்

"அறந்தனா லழிவில தாகி னாக்கலாம்" எனவும் வரும் கம்பராமாயணச் செய்யுளானுமறிக.

57. இ - ள்: தம்பியும் போன பின்பு - இளையபெருமாளும் போன பின்னர், சானகி தனியளாகி இம்பரில் வைகுங்காலை - சீதாபிராட்டியார்தனித்தவராகி இவ்விடத்தி

விருக்கும்பொழுது, இராவணன் துறவி வேடம் நம்புறக் கொண்டு சென்று - (வஞ்சகனாகிய) இராவணன் சந்நியாசியாகிய வேடத்தை நம்புமாறு எடுத்துக்கொண்டு வந்து, நங்கையைக் கவர்ந்து செல்ல - மகடுக்களுட் சிறந்த சீதாபிராட்டியாரை நிலத்தோடு கீண்டெடுத்துக்கொண்டு (ஆகாயமார்க்கமாகப்) போக, உம்பரில் சடாயு கண்டு உருத்து அவனை எதிர்ந்தான் - ஆகாயத்தில் வருதலைச் சடாயுகண்டு கோபித்து அவ்விடத்தெதிர்த்து வந்தான்.

அங்கு, அன்று, ஏ அசை. வஞ்சனையன் றுண்மையெனக் கருதவெடுத்த வேடமென்பார் "நம்புறக் கொண்டு" என்றார்.

58. இ-ள்: அங்கு எதிர்ந்து தாக்கி நின்ற சடாயுவை - அவ்விடத்திலெதிர்த்துப் போர் தொடுத்து நின்ற சடாயுவை, சிறகு போக நீக்கி - வாளினால் சிறகுகளற்றுப் போகும்படி வெட்டியொதுக்கி, இ நிலத்தில் வீழ்த்தி - இந்தப் பூமியில் விழுத்திவிட்டு, நெடு அகழ் இலங்கை புக்கு - நீண்ட வகழியையுடைய விலங்காபுரியில் வந்து, பூ கமழ் அசோகம் காவில் பூவையை இருக்கவிட்டு - மலர்கள் பரிமளம் வீசிக்கொண்டிருக்கின்ற வசோகமரச் சோலையின்கண் சீதாதேவியையிருக்கவைத்து, கடிய சொல் அரக்கிமாரை இனிது காக்குமாறு வைத்தான் - கொடுஞ்சொற்களைப் பேசுகின்ற வரக்கப் பெண்களை யிதஞ்செய்து காக்கும்படி வைத்தான்.

சடாயுவை வீழ்த்தியென் றியையும் அம் சாரியை சமுத்திரமே யகழியென்பது தோன்ற "நெட்டகழிலங்கை" என்றார். அசோகு - சோகந்தீர்ப்பது.

59. இ-ள்: பொன்மான் அதன்பின் போன பூபதி - பொன்மானாகிய அதன்பின்னே சென்ற ஸ்ரீராமபிரான், தம்பி வந்து சொன்ன வாசகங்கள் கேட்டு - இளையபெருமாள் வந்து தமக்குச் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டு, துயர்ப் பெருங் கடலின் மூழ்கி - துன்பமென்னும் பெரிய சமுத்திரத்திலே முழுகி, பன்னசாலைக்கண் வந்து பாவையைக் காணாகி - (அதிசீக்கிரமாக) பன்னசாலையின்கண் வந்து சீதாதேவியை அங்கு காணாதவராகி, இன்னலுற்று அழுங்கி நின்றான் - துன்பப்பட்டிரக்கமுற்றுநின்று, இருவரும் தேடலுற்றார் - (பின்பு) இலக்குமன்னனும்தானுமாகச் சீதாதேவியைத்தேடுவாராயினர். இன் அன்வழிச்சாரியை. நின்றான் முற்றெச்சம்.

60. இ-ள்: இருவரும்தேடுங்காலை-(இவ்வாறு) இருவருமாகத்தேடிக்கொண்டு வரும்பொழுதில், இறகு அற்று வலியும

கெட்டு - சிறகுகளையுமிழந்து வலிமையையுமிழந்து, தரையினில் கிடக்கும் அந்த சடாயு கண்டு - நிலத்தில் கிடக்கின்ற அந்த சடாயு அவர்களைக் கண்டு, அவட்கு நேர்ந்த கருமமும் வழியில் சொன்ன காதையும் பிறவுங் கூறி - சீதாதேவிக்கு நிகழ்ந்த செயல்களையும் (அந்தச் சீதாதேவி) மார்க்கத்திலே இராவணனை யிகழ்ந்து சொன்ன கதைகளையும் பிறவற்றையுஞ் சொல்லி, விரைவினில் உடலம் விட்டான் - சீக்கிரத்தில் இறந்துபோயினன், வீரரும் தகனம் செய்தார் - இராமலக்குமன்னராகிய விருவரும் சடாயுவுக்கு தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்தார்கள்.

இலங்கை வேந்தனாகிய இராவணனை வென்றிகொண்டு சீதாபிராட்டியாரை மீட்பீர்களென் றிதனையுஞ் சொன்னானென்பார் "பிறவுங்கூறி" என்றார்.

61. இ-ள்: அங்கு வந்து இகழ்ச்சி செய்த அயோமுகி என்னும் நாமமங்கையை - அவ்விடத்து வந்து தங்களை நிந்தனை செய்த அயோமுகி என்னும் பெயரையுடைய அரக்கப் பெண்ணை, இளையகோமான் வன் செவி நாசி கொய்தான் - இளையபெருமாள் வலிய காதின்கண்ணும் மூக்கின்கண்ணும் அரிந்தார், தங்களை எடுத்துச் சென்ற கவந்தனை தம்பியோடு புங்கவன் அறுத்து வீழ்த்தான் - தங்களைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்திற் சென்ற கவந்தனென்னும் அரக்கனை அவன் தம்பியோடு ஸ்ரீராமபிரான் வெட்டி விழுத்தினார், அவனும் தேவுலகம் போனான் - கவந்தனும் இறந்து விண்ணுலகத்தைச் சேர்ந்தான்.

மங்கையை, என முதற்பொருளுக்கு ஐ யுருபு கொடுத்தமையின் செவி நாசி என்னும் சினைப்பொருள்களுக்கு கண்ணுருபு கொடுத்தாம்.

62. இ-ள்: தே உலகு ஏகும் காலை - (கவந்தனென்பவன்) வானுலகத்திற்குச் செல்லாநிற்கும் சமையத்தில், சீதையைத் தேடுதற்கு தாவு சுக்ரீவன் தன்னை சாருதி என்று சொன்னான் - (இராகவனே நீ) சீதாதேவியைத் தேடுதற்கு (உற்ற துணையாக) பாய்கின்ற சுக்கிரீவன் என்பவனை அடையக்கடவாயாக என்று சொன்னான், ஆவதும் கேட்டார் - அதனையுங் கேட்டவர்களாகிய இராமலக்குமன்னர்கள், பின்னர் - பின்பு, அவ்விடம் விட்டு - அந்தக் கவந்தன் வனத்தை நீங்கி, தென்பால் ஏகினர் - தென்திசையாக வந்து, சவரி வைகும் விரத ஆச்சிரமஞ் சேர்ந்தார் - சவரி என்பவள் இருக்கின்ற

தபோமயமாக விளங்கும் ஆச்சிரமத்தில் வந்தார்கள். மேவினர் முற்றெச்சம். கேட்டார் வினையாலணையும் பெயர்.

63. இ – ள் : சவரி ஆச்சிரமம் புக்கு சவரி பூசனையும் பெற்று - (அவ்வாறே) சவரி ஆச்சிரமத்தில் வந்து சவரியினால் செய்யப்படும் விருந்துபசாரத்தையும் பெற்றுக்கொண்டு, கவலையினோடும் தென்பால் அரும் சுரம் கடந்து சென்று - மனக்கவலையோடும் தென்றிசையாகச் சேறற்கருமையான பாலைநிலங்களையும் கடந்துசென்று, குவடுகள் பலவுஞ் சூழ்ந்து குலவு கிட்கிந்தை என்னும் புவி புகழ் மலையில் போந்து – பற்பலமலைகளாற் சூழப்பட்டு விளங்குகின்ற கிட்கிந்தை என்று சொல்லப்படும் உலகத்தவர்புகழுகின்ற மலையில் வந்து, புலம்பொடும் இருந்தார்–(அம் மலைச்சாரலிலே) இரங்கிக்கொண் டிருந்தார்கள். அன்று, ஏ அசைகள். புவி ஆகுபெயர்.

கிட்கிந்தாகாண்டம்

64. இ – ள் : சுக்கிரீவன் அநுமன் எனச்சொலும் மிக்க வானரவீரர் இருவரும் - சுக்கிரீவன் என்றும் அநுமன் என்றும் சொல்லப்படும் உயர்ந்த குரங்கு வீரர்கள் இருவரும், ஆடு போர் புக்கு வாலி பொருவலிக்கு அஞ்சி – பொருகின்ற போரிற் போய் வாலியென்பவன் பொருகின்ற போர்வலிமைக் கஞ்சினவர்களாய், அ கிரிக்கண் இருந்தனர் – அந்தக் கிட்கிந்தை மலைக்கண் இருந்தார்கள். ஏ அசை.

இம் மலையில் வாலி வரின் அவன் றலை பிளக்கக் கடவதென்று மதங்க முனிவரின் சாபமொன் றிருத்தலால் கிட்கிந்தைமலை சுக்கிரீவனுக்குப் புகலிடமாயிற்றென் றுணர்க.

65. இ – ள் : இருந்த வானரவீரர் இருவருள் திருந்து மாருதி–அங்ஙனமிருந்த குரங்கு வீரர்கள் இருவருக்குள்ளும் திருத்தமுற்ற அநுமான், சேர்ந்த விருந்தரைத் தெரிந்து-அம் மலைச்சாரலில் வந்திருந்த இலக்குமன்னராகிய புதியவர்கள் இருவரையுங் கண்ணூன்றிப் பார்த்து, அவர் செய்கை முழுவதும் பரிந்து கேட்க – அவர்கள் தஞ்செயல்கள் எல்லாவற்றையும் அன்புகூர்ந்து கேட்க, அவர்களும் பன்னினார் – ஸ்ரீ ராமபிரானும் தம்பியும தங்கள் வரலாற்றை யெல்லாம் சொன்னார்கள். மற்று - அசை.

சின்னத் திருவடிகளாகலின் அநுமனை வாழா கூறாது "திருந்து மாருதி" என விசேடணம் கொடுத்துக் கூறினார்.

66. இ – ள் : புக்கு - அநுமன் திரும்பி வந்து, தொக்க மைந்தர்கள் சொல்லிய யாவையும்–ஒருங்கிருந்த இராமலக்கு மன்னர்கள் சொன்ன எல்லாவற்றையும், சுக்கிரீவற்குச் சொல்லி–சுக்கிரீவனிடத்திற் சொல்லி, நண்புமிக்கு வளர்ந்து விளங்க - நட்பானது அதிகரித்து நாளுக்குநாள் வளர்ந்து விளங்கும்பொருட்டு, அவனையும் மைந்தர்களோடு பொருத்தினான் – சுக்கிரீவனையும் இராமலக்கு மன்னரோடு கலந்து கொள்ளச் செய்தான். ஏ – அசை.

67. இ – ள் : இருவர் தாமும்–இராமபிரானும் சுக்கிரீவனும், ஒருவர் செய்தி ஒருவர் உணர்ந்திட இயம்பினர்–ஒருவர் சம்பவத்தை ஒருவரறியும்வண்ணம் (ஒருவர்க்கொருவர்) கூறினார்கள், (அப்பொழுதில்) புங்கவன் வாலியைப் பொருவன் என்றனன் – ஸ்ரீராமபிரான் யான் வாலியைக் கொன்று தருவேன் என்று கூறினார், மற்றவன் தையலை நாடித் தருவன் என்றனன் – மற்றைச் சுக்கிரீவன் யான் சீதையைத் தேடித் தருவேன்என்று கூறினான். ஏ–அசை. பொருதல் ஆகுபெயர்.

68. இ-ள் : நாடும் வாலி வலிமையும்-வீரர்கள் விரும்புகின்ற வாலியுடைய வலிமையையும், நண்ணி போர் ஆடி தன்னை அலைத்ததும் – வந்து போர் செய்து தன்னை அலைவு செய்ததையும், தன் மனை கூடும் தேவியை கொண்டதும் – தனதில்லிற் குரியவளாகிய தாரையென்பவளைக் கவர்ந்ததையும், சீதையைத் தேடிவந்தவர் தேறவிளம்பினான்–சீதாதேவியைத் தேடி வந்தவர்களாகிய இராமலக்கு மன்னர்கள் அறியும்படி (சுக்கிரீவன்) மீட்டும் சொன்னான்.

69. இ – ள்: துலங்கும் வெய் வலி சோதனை செய்ய – (இராவணனை வாலிற் கட்டும் பேராற்றலையுடைய வாலியைக் கொல்லுதற்குரிய) பிரகாசிக்கின்ற கொடிய வலிமை இவற்குண்டோ இன்றோ வென்று சோதனை செய்யும்படி, நிலங்கிடந்து நிமிர்ந்து மலையென அலங்கும் துந்துபி ஆக்கை எலும்பினை – பூமியிற் கிடந்து வளர்ந்து மலையைப்போல விளங்குகின்ற துந்துபி யென்னும் அரக்கனது உடம்பின் எலும்பை, கலங்கி வந்தவர் கண்டிட காட்டினான் - (சானகியைக் காணாது) கலக்கமுற்று வந்த இராமலக்குவர்கள் காணும்படி காண்பித்தான். ஏ – அசை.

துந்துபியென்னும் அரக்கனது என்பை, தேக அப்பியாசத்தின் பொருட்டு தினந்தோறும் வாலி காலினால் எடுத்து மேலே வீசி அது வீழுகையில் தோள்கொடுத் தேந்தலானும் அத்துணைப் பேராற்ற லிருந்தாலன்றோ இவர் வாலியைக்

கொல்வாரென்னும் தனதையந் தீருமாறு பரீக்ஷித்தற்கு அவ்வென்பைக் காட்டினன் என்பார், "சோதனை செய்யக் காட்டினன்" என்றார் என்க.

70. இ-ள்: கரிய கோமகன் - கரிய நிறத்தையுடைய இராசகுமாரனாகிய ஸ்ரீராமபிரான், சுக்கிரீவன் தனக்கு காட்டி சொன்னதும் கேட்டு - சுக்கிரீவன் (என்பை) தனக்குக் காண்பித்து (துந்துபியினுடைய என்பைக் கொண்டு அப்பியாசஞ்) செய்தலைச் சொன்னதையும் கேட்டு, தன் கால் பெருவிரலின் எற்றினன் தனது காலின் பெருவிரலினால் எற்றிவிட்டனர், அ மலை விண் எழுந்து ஒரு கணத்தினுள் நீளிடை ஓடிற்று - அந்தவென்பு மலையானது ஆகாயத்திலெழுந்து ஒரு கண்ணிமைப்பொழுதினுள் நெடுந்தூரம் போயினது.

இராகவன் கற்பிக்க இலக்குவன் தன் காற் பெருவிரலாலெற்றினானென்று இந்நூற்கு மாறாகக் கம்பராமாயணம் கூறுதலும் காண்க.

71. இ-ள்: பராரை மேவி உயர்ந்து - பருத்த வரையைப் பொருந்தி மேலே உயர்ந்து; மடைகளும் விராவுதற்கு அரும் திண்மை விளங்கிய - படைக்கலங்களுஞ் சென்று நெருங்குதற்கரிதான வயிரம் விளங்கிய, மராமரத் தொகை காட்டினன் - மராமரக்கூட்டத்தைச் (சுக்கிரீவன்) காண்பித்தான், இராமன் பாணம் ஒன்று அவை ஏழும் துளைத்தது - ஸ்ரீராமபிரான் விட்ட அம்பொன்று அம் மரங்களேழையும் ஊடுருவினது. ஏ, மற்று - அசை.

தனுர்வேதத்தி லதிதீவிரமுள்ள இராகவனுக் கிஃதெம் மாத்திரமென்பதும், விரைவுந்தோன்ற வில்வளைத்த லம்பு தொடுத்தல்களைக் கூறாது "காட்டினன் துளைத்தது" என்றார் மேலே தேகவலியைப் பரீக்ஷித்தவாறுபோல இஃது வில்வலியைப் பரீட்சித்தபடி யென்க.

72. இ-ள்: இந்த வீரர் இருவரும் - இந்த வீரர்களிரண்டு பெயரும், எம்பகை சிந்துவார் என சிந்தைமகிழ்ந்திடும் அந்த வீரரும் - எங்கள் பகைவனை வாலியை நிச்சயமாகக் கொல்லுவார்களென்று மனக்களிப்படைகின்ற அந்தச் சுக்கிரீவனுமவெனனு மிரண்டு வீரர்களும், அம்மையை தேடி வந்த வீரரும் - சீதாதேவியைத் தேடும் பொருட்டாக வந்த இராம லக்குமன்னர்களும், அ மலை வைகினர் - அந்தக் கிட்கிந்த மலைக்கண் அதி நட்புக்கொண்டிருந்தார்கள். பகை - ஆகுபெயர்.

என்பைக் கொண்டும் மராமரங்களைக் கொண்டும் பரீக்ஷித்துத் தெளிந்தமையின் "பகை சிந்துவார் என சிந்தை மகிழ்ந்திடு மந்தவீர" ரென்றார்.

73. இ-ள்: தம்பி சுக்கிரீவன் - தம்பியாகிய சுக்கிரீவன், வாலியைப் போர்க்கு வருக என - தமையனாகிய வாலியைப் போருக்கு வரக்கடவையென்று வீரம் கிளந்து அறைகூவினான் - வீரம் பேசிப் பொருதற் கழைத்தான், வாலியும் விரைவில் மேவ - வாலியென்பவனுஞ் சீக்கிரத்தில் (ஆயத்தமாகி) வர, அவனொடும் பொருத தம்பி புறங்கொடுத்து ஏகினான் - அந்த வாலியுடனே போர்செய்த சுக்கிரீவன் புறங்கொடுத்துப் போயினான்

74. இ-ள்: ஏகும் வீரன் இராமனொடு எண்ணி - புறந்தந்துபோன சுக்கிரீவன் இராகவனுடனாலோசித்து, பின்னும்-மீளவும், வாகை வாலியை வருக என போக - வெற்றியையுடைய வாலியைப் பொருதற்கு வரக்கடவையென்று அழைத்துக்கொண்டுபோக, அவனும் வந்து பொர-(போரெனிற் புயமும் பூரிக்கும்) அந்த வாலியும் வந்து பொரா நிற்ப, புங்கவன் மறைந்து வேகவாளி விடுத்தனன் - ஸ்ரீராமபிரான் ஒளித்துநின்றுவேகமானபாணத்தைச்செலுத்தினார் ஏ-அசை

75 இ-ள்: விட்ட வாளி விரைந்து தன் மார்பகம் பட்டு - பிரயோகித்த பாணமானது சீக்கிரத்தில் தனதுமார்பகத்திற் படுதலால், வாலி சுவர்க்கம் படர்ந்தனன் - வாலியென்பவன் சுவர்க்கத்திற் போயினன், கிட்டும் அச் சுக்கிரீவன் - (நட்புடையவனைச்) சார்ந்த அந்தச் சுக்கிரீவன், கிட்கிந்தையில் பட்டம் எய்தி அரசியல் பற்றினன் - கிட்கிந்தை மலையில் (இராசசின்னமாகிய) பட்டத்தைப்பெற் றரசாட்சியைக் கைக்கொண்டான். பட்டு - ஏதுப்பொருட்டு.

76 இ-ள்: வீரரிருவரும் சென்று - இராமலக்குமனர்களாகிய விருவரும்போய், தென் திசைநின்ற மாலியவான் எனும் நீள் மலை துன்றி - தென்றிசைக்கண் நின்ற மாலியவான் என்னும் நெடிய மலையின் கண்ணிருந்து, ஈர் இருமாசம் தொலைத்தனர் - (அங்ஙனமிருந்து) நான்கு மாசங்கள் கழித்தார்கள், (அங்ஙனங் கழித்தபின்பு) வென்றி வீரன் தம்பியை விளித்தனன் - வெற்றியையுடைய ஸ்ரீராமபிரான் இலக்குமன்னனை யழைத்து

விளித்தனன் - முற்றெச்சம்.

77. **இ - ள்:** ஈட்ட வானர வேந்தனை - கூட்டமான குரங்குகளுக் கரசனாகிய சுக்கிரீவனை, இ இடை கூட்டி வா என கொற்றவன் கூறலும் - இவ்விடத்திற்குக் கூட்டிக் கொண்டுவரக் கடவையென்று அந்த இராகவன் கூறுதலும், கேட்ட தம்பி அழைக்க - பணிப்புரையைக் கேட்டு நின்ற இலக்குமன்னர் அங்கேசென்று அழைக்க, அவன் கிளர்ந்து - அந்தச் சுக்கிரீவன் எழுந்திருந்து, கூடு இனத்தொடு இராமனை கூடினான் - கூடிய குரங்கினங்களோடு வந்து ஸ்ரீராம பிரானைச் சேர்ந்தான்.

மேலைச் செய்யுளில் "விளித்தனன்" என்னும் முற்றெச்சம் இச்செய்யுளில் "கூறலும்" என்னும் முற்றுவினையோடு முடிந்தது.

78. **இ - ள்:** தேடுவீர் எனும் செம்மல் உரையினால் - (அப்பொழுதில் சானகியை) தேடக்கடவீரென்று சொன்ன ஸ்ரீராமபிரானுடைய கட்டளையினால், கூடும் வானர கோமகன் - (எழுபது வெள்ளம் என்னும் தொகையினராய்) கூடி நிற்கும் குரங்குகளுக் கரசனாகிய சுக்கிரீவன், சீதையை தேடும் வண்ணம் - சீதாதேவியைத் தேடும்படி, ஓடும் வானர வீரரை - உலாவுகின்ற குரங்கு வீரர்களை, திசை நான்கினும் உய்த்தனன் - நான்கு திசைகளிலும் அனுப்பி வைத்தான். ஒரு - அசை. உரையினால் கோமகன் உய்த்தனன் என முடிக்க.

79. **இ - ள்:** சீதை கண்டு தெளிந்து துணிந்திட - (என் கணவனால் அனுப்பப்பட்டவன் என்று) சீதாதேவி பார்த்து ஐயமின்றித் துணியும்பொருட்டு, ஏதம் அற்ற இதனைக்கொடு என - குற்றமில்லாத இதனைக் கொடுப்பாயாகவென்று சொல்லி, நாதன் ஈந்திடும் - ஸ்ரீராமபிரான் கொடுத்த, நல் விரல் ஆழியும் - நல்ல மோதிரத்தையும், பேதம் நீங்கும் அநுமனும் பெற்றனன் - (இராமலக்குமன்னரோடு) வேறுபாடில்லாத அநுமான் பெற்றுக்கொண்டான்.

மாறுபாடில்லாத தூதனென்பது போதர "பேதநீங்கு மநுமன்" என்றார். சடாயு கூற்றானும் பிறவாற்றானும் சானகியை வஞ்சித்தவன் இராவணன் என்றும், அவனிருப்பது தென்னிலங்கையென்றும் தெளிந்துகொண்டமையின் தென்னிலங்கைக்குச் சென்று மீளுதற்குத் தக்கவனென்று மோதிரமுங் கொடுத்து அநுமனையும் அனுப்பினர் என்றறிக.

80. **இ - ள்:** அநுமன் அங்கதன் ஆதியர் தென்திசை நனி புகுந்து - அநுமனும் அங்கதனும் முதலாகவுள்ளோர் தென்திசையாக மிகவுஞ் சென்று, சம்பாதி நவின்றிடும் வனிதை வாய்மொழி வார்த்தையுங் கேட்டனர் - சம்பாதியென்பவன் சொன்ன சீதாபிராட்டியின் வாய்மொழியாகிய வார்த்தையுங் கேட்டு, இனிது தென்கடல் எல்லை மருவினர் - இனிதாகத் தென்சமுத்திரத்தின் கரையை அடைந்தார்கள். கேட்டனர் முற்றெச்சம்.

சானகி வேண்டிக் கூறிய மொழியாகலின் வாய்மொழியென வேண்டாது கூறினார். சம்பாதியும் தம்பியாகிய சடாயுவும் சூரியன் றேர்ப்பாகனாகிய அருணனின் புதல்வர். இங்கே தென்கடல் எல்லை என்றது பாண்டிநாட்டின்கண்ணுள்ள தனுக்கோடியென வழங்கும் சமுத்திர தீரத்தை. மார்க்கத்தில் சீதாபிராட்டியார் தன்னைச் சந்தித்து என்னை அரக்கன் வஞ்சித்துக் கொண்டு போகின்றமையை என்னையனுக்குச் சொல்வாயாக என்று சொன்னமையை அநுமன் அங்கதன் ஆதியர்க்குச் சம்பாதி இங்குக் கூறினன் என்றறிக.

81. **இ - ள்:** வானர வீரர்குழாத்துள் - குரங்கு வீரர்களின் கூட்டத்துள், மருவு தென்கடல் வாவி யிலங்கைபுக்கு - (இலங்கையோடு) மருவியிருக்கும் தென் சமுத்திரத்தைக் கடந்து இலங்காபுரியிற் போய், அரிவை செய்கை யறிந்து உடன் வந்திட - பிராட்டியாரின் செயலை யறிந்துகொண்டு உடனே மீண்டு வருதற்கு, உளம் வெருவி ஒருவரேனும் உடன்பட்டிலர் - மன மஞ்சி ஒருவராயினும் சம்மதப்படாராயினர். ஏ அசை. தென்கடல் பிறிதினியைபுநீக்கியவிசேடணம்.

82. **இ - ள்:** தற்புகழ்ந்துரை சாம்பவன் கூறிட - தன்னைப் புகழ்ந்து புகழ்ச்சி வசனங்களைச் சாம்பவந்தன் சொல்லிய அளவில், பெற்ற மாருதி ஓகை பெருகி - (அப்புகழ்ச்சி வசனங்களைக்) கேட்கப்பெற்ற அநுமான் மகிழ்ச்சி மிக்கவனாகி, பொற்பினோடு பொலிந்து - அழகோடும் தேகம்பூரித்து, மகேந்திர வெற்பினுச்சியிலேறி விளங்கினான் - மகேந்திரமென்னும் உச்சியின்மேலேறிப் பிரகாசித்தான்.

ஏ அசை. பெற்ற மாருதியெனக் கண்ணழித்து வாயுகுமாரனாகிய அநுமன் எனப் பொருள்கோடல் இங்குப் பொருந்தாதென்க

சுந்தரகாண்டம்

83 இ - ள்: அடல்பெருகும் மாருதியும் அம் மலையின்மீது எழுந்து - வலிமை மிகுந்த அநுமானும் அந்த மகேந்திர மலையின்மேலேறிநின்று, மிடல் பெருகும் மைந்நாகம்மீது எழுந்து வருவதுவும் பார்த்து - வலிமைமிக்க மைநாகமென்னும் மலை (கடற்றிரைகளுக்கு) மேலே எழுந்து தோற்றுவதையும் பார்த்து, உடல் ஒருவ வரும் அரக்கி உயிரையுங் கொன்று - தன்னுடம்பை யிழக்கும் வண்ணம் வருகின்ற அரக்கியினது உயிரையும் வதைசெய்து, அவ்வழியே கடல் அழுவந் தாவி இலங்காபுரியுங் கண்டனன் - அந்த மார்க்கமாகவே சென்று கடற்பரப்பையுங் கடந்து இலங்கைமாநகரையும் கண்டான்.

ஏ-அசை இந்திரன் சிறகரிவனென்றஞ்சி இமயபர்வதராசன் மகனாகிய மைநாகனென்னும் வெற்பு தென்கடலுள் மூழ்கி, அலைகளின் அசைவினாலே மேலெழுந்து தோற்றுதலையும் கண்டான் என்பார், "மைநாகம் மீதெழுந்து வருவதுவும் பார்த்து" என்றார் தென்கடலுள் மைநாககிரிக்கும் நீலகிரிக்கும் மத்தியிலே வடவைத்தீ யிருக்கின்றதென நூல்கள் கூறுகின்றன.

84. இ - ள்: தாவியெழும் மாருதியும் - எழுந்து பாய்கின்ற அநுமானும், வழிமறிக்கும் இலங்கை மகாதேவி தனை வலிதொலைத்து - வழிமறித்து வருகின்ற இலங்கை மாகாளியை வலிமையை அழித்துப் புறந்தரச்செய்து, திறல் அரக்கர் நகரியிற்போய் - பராக்கிரமசாலிகளான அரக்கர் வசிக்கின்ற இலங்காபுரியிற் போய், பாவி இராவணன் துயிலும் பான்மையும் பார்த்து - பாவியான இராவணன் நித்திரை செய்கின்ற தன்மையையும் பார்த்து, ஒரு வனிதை அசோக மரக் காவிலிருந்து கலங்குவதுங் கண்டனன் - ஒரு பெண்ணரசி அசோகமரச் சோலையின்கண்ணிருந்து மனக்கலக்கம் அடைகின்றதையுங் கண்டான். ஏ அசை.

"வாவியெழும்" என்பதை "எழுந்துவாவும்" என மாற்றுக. இராவணன் அவலமான நித்திரைக்கிடையிலிருந்து சீதாதேவியின் கற்பழியாமையைத் தெளிந்தான் என்னுங் குறிப்புத்தோன்ற, துயிலும் என்றது "துயிலும் பான்மையும் பார்த்" தென்றார். இதனால் காலம் இராக்காலமென்பது பெறப்பட்டது.

85. இ - ள்: அநுமான் இலைமறைக்கும் மரக்கிளையில் தங்கியிருந்து-(அங்ஙனம் ஒரு வனிதை கலங்குவதைக் கண்ட)

அநுமான் இலைகளால் மறைக்கப்பட்டிருக்கும் ஒரு அசோக மரக்கொம்பரிலிருந்து, இங்கு இவள் ஆரென உளம் அயிர்க்கும் சமையத்தில்-இவ்விடத்தில் இந்த மங்கையர்க்கரசியானவர் யாரோவென்று தன்மனதில் ஐயமுறும்வேளையில், இராவணனும் மங்கையிடம் வந்து-இராவணனென்பவனும் சீதாபிராட்டியாரிடத்தில் வந்து, எனக்கு மனையவள் ஆக என இரப்ப - பெண்ணரசியே! நீ எனக்கு மனைவியாகக்கடவையென்று குறையிரந்து கேட்ப, அங்கு அவளும் கடிந்துரைத்தாள் - அப்பொழுது சீதாபிராட்டியாரும் (அவனை யோர்) துரும்பாக மதித்துக் கடிந்துகூறினார், அவனும்அங்கு அகன்று ஏகினன் - இராவணனும் அங்கு நின்றும் நீங்கிப் போயினான் ஏ-அசை. தங்கியிருந்து ஒருபொருட்பன்மொழி.

86. இ - ள்: பாதபத்தின் மிசையிருந்தோன்-அசோக மரத்தின் மேலிருந்த அநுமான், பலவாறு புலம்புகின்றாள் சீதையென நிச்சயித்து-பலவிதமாகப் புலம்புகின்றவராகிய இவர் சீதாபிராட்டியார்தாமென்று தெளிந்து, சிந்தை மகிழ்ந்து - மனமகிழ்வடைந்து, அணிமையிற் போய் -- சமீபத்திற் போய் நின்று, காதலன்றன் செய்கையெலாங் கட்டுரைத்து-பிராணநாயகராகிய ஸ்ரீராமபிரானது செயல்களையெல்லாம் உறுதியாகக்கூறி, தான் கொணர்ந்தமோதிரமும் அவளிடத்திலே முறைநின்று கொடுத்தனன் - (கணவனடையாளமாக) தான் கொண்டுவந்த மோதிரத்தையும் முறையாக நின்று கொடுத்தான். ஏ - அசை.

அரசிக்குத் தன்னடிமை தோன்றக் கைகட்டி வாய் புதைத்து ஒதுங்கி நின்று கொடுத்தானென்பார் "முறைநின்று" கொடுத்தனன் என்றார்.

87. இ - ள்: நலங் கிளரும் மோதிரத்தை-(அநுமன் கொடுத்த) அழகு விளங்குகின்ற அந்த மோதிரத்தை, ஈது நாதன் அணி என - இஃது என் கணவனுடைய மோதிரமென்று வாங்கி, மனங் கலங்கி வெய் துயிர்த்து - (தன்னை மணஞ்செய்த நாட்டொடங்கி தானுங்கணவனும் இன்புற்று வாழ்ந்தசுகங்களையெல்லாம் அம்மோதிரம் நினைவிற்கொண்டு வர) மனமுடைந்துநெடுமூச்சுவிட்டு, காதலனைப்பிரிந்துநின்ற பொலம் கொடியும் - கணவனைப் பிரிந்து நிற்கின்ற பொற்கொடிபோலும்சீதாபிராட்டியாரும், இங்கு இதனைப்புங்கவன் பாற் கொடுத்தியென - இங்கே இதனை எனது பிராணநாயகரிடத்திற் கொடுப்பாயாகவெனச் சொல்லி, அலங்கிய சூடாமணியை அநுமனிடங் கொடுத்தனள்-(தான் வைத்திருந்த) பிரகாசிக்கின்ற சூடாமணியை அநுமானிடங் கொடுத்தார்,

ஏ அசை. பொலம்-பொன் என்பதன் விகாரம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புள்ளிமயங்கியல் ' பொன்னென் கிளவி ஈறுகெட முறையின், முன்னற் றோன்றும் லகார மகாரம், செய்யுண் மருங்கிற் றொடரிய லான " என்பதனா லுணர்க.

88. இ - ள் : தூதன் எனும் அநுமானும்-இராகவன் தூதுவன் என்று சொல்லப்படுகின்ற அநுமானும், சூடை மணிதனைப்பெற்று - சூடாமணியைப் பெற்றுக்கொண்டு, பெண்ணணங்கே-பெண்களுள் தெய்வம்போல்பவரே, இனிப் பீடை கொளவேண்டாம் - நீர் இனி வருத்தங்கொள்ளவேண்டாம், வெம் போரில் - கொடிய யுத்தத்தில், கேடுசெயும் இராவணனை கிளையோடும் முடிவு எய்த சாடி - கெடுதலைச்செய்கின்ற இராவணன் என்பவனை அவன் சுற்றமாகிய அரக்கர்களோடும் முடிந்துபோகும்படி கொன்று, உனையும் அழைத்து தன்னகரம்செல்லுவன் - (ஸ்ரீராமபிரான்) தங்களையும்அழைத்துக்கொண்டு தனது அயோத்தியாபுரிக்குப் போவார். ஏ அசை "சூடா" ஆவீறு ஈண்டுச் சூடையென ஐயீறாயிற்று. நன்னூல் 'ஆவீறையும்' என்பதனான் உணர்க.

89. இ - ள் : என்று சொலி - இவ்வாறு (சானகியம்மாளுக்குத்) தேற்றரவுசொல்லி, அநுமானும் அவ்விடம்விட்டு ஏகி - அநுமானும் அந்த இடத்தைவிட்டுச் சிறிதுதூரஞ் சென்று, அயல் நின்ற பொழில் இறுத்து அழித்து - ஒரு பக்கத்தில்நின்ற அசோகமரச்சோலையை முரித்தழித்து, நேர்ந்த. எதிர்த்த, அக்கன் முதலாகத் துன்றிய தொல்லரக்கர் குலம் தொலைத்து ஒழியக்கொன்று அழித்து - அக்ஷயகுமாரன்முதலாக நெருங்கிய இராக்கத குலத்தை தொலைந் தொழிந்து போகுமாறு கொன் றில்லாமற் செய்து, கன்றிய இந்திரசித்து கட்டிடவும் பெற்றனன் - கோபித்து வந்த இந்திரசித்தனால் கட்டும்படியாகவும் அகப்பட்டான். ஏ - அசை.

அக்கன்-இராவணனின் இளையமகன் இந்திரசித்து தன்னைக்கட்டுதற்குத்தக்கவலியுடையானல்லன் என்பதுதோன்ற உயர்வு சிறப்பும்மை கொடுத்து கட்டிடவும் என்றும், தான் ஒருகால் இராவணன் முன்னிலைக்கு செல்லுதல் சம்மதமென்பது தோன்ற "பெற்றனன்" என்றும் கூறினார்.

90. இ - ள் : மாருதியைக் கட்டுடனே கைகொடுபோய் இராவணன்முன் விட்டிடலும்-(இந்திரசித்தன்) அநுமானைக் கட்டினோடு கைப்பிடியாகக் கொண்டுசென்று இராவணனுடைய முன்னிலையில் விட்டமாத்திரத்தில், வெறுத்து அபவாதம் உரைத்த இராவணற்கு-பகைத்து (இராகவன்மேல்)

35714

இகழ்ச்சி வார்த்தைகளைப் பேசிய இராவணனற்கு, பட்டம் உறும் தசரதனார் பாலகன்றன் பெருமையெல்லாம் கட்டுரைத்து - மகத்துவ சின்னங்களைப் பெற்றிருக்கும் தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரராகிய ஸ்ரீராமபிரானது மேன்மைகள் முழுவதையும் வலியுறுத்திக் கூறி, தன் வலியுங் கலங்காது காட்டினன் - தனது சாதுரியங்களையும் கலக்கமில்லாமல் காண்பித்தான். ஏ - அசை.

அச்சமின்றிக் காண்பித்தானென்பார் "கலங்காது" என்றார்.

91 இ - ள் : தோல்வியுறும் அரக்கரெலாம் சூழ்ந்து-(தனதுபோரில்) புறந்தந்துபோன இராக்கதர்களெல்லோரும் ஒருங்குதிரண்டு, அநுமான் வாலினிடை சீலையிற் பந்தமுறச் செய்து - அநுமானது வாலின்கண் பற்பல சீலைகளை கட்டாகச் சுற்றி, தயிலமும் விட்டு - தயிலத்தையும் ஊற்றி, வால் எரிக என கொளுத்த - இவனது வால் எரிந்துபோகக் கடவதென்றுசொல்லி தீயைக்கொழுத்த, வளர்நெருப்போடு எங்கணும்போய் - (அப்பொழுதில் அநுமன் என்பவன்) சுவாலைவிட்டெரிகின்ற நெருப்பினுடன் எவ்விடங்களிலுஞ் சென்று, கோல இலங்காபுரியை முற்றக் கொழுத்தி எரித்தனன் - அழகான இலங்காபுரத்தை முழுதும் கொழுத்தித் தகனஞ் செய்தான். ஏ - அசை.

இராவணனதாசனத்தளவுயரச் சுருணையிட்டதன்மேலாக ஒக்க இருக்க அநுமனுக்குதவி இராவணனுக்கு நிந்தையைச் செய்த வாலில் சாலவும் கோபமுண்டென்பார் "வாலெரிக" என்றாரென்க.

92 இ - ள் : கலங்க எரி கொழுத்தியபின் - (இலங்காபுரம்) கலக்கமுறும்படி அக்கினியிட்டெரித்தபின்பு, கடல் கடந்து வானரத்தின் குலங்களைச்சேர்ந்து - சமுத்திரத்தைத் தாண்டி (தனது வருகையைக்காத்து கந்தமாதன மலையின்கணிருந்த) குரங்குக் கூட்டங்களையடைந்து, அவற்றினொடும் கொம்மென இராமனையணுகி - அந்தக் குரங்கினங்களோடும் சீக்கிரத்தில் (மாலியவான் என்னும் மலையில்) ஸ்ரீராமபிரானிடத்து வந்து, இலங்கைநகரிடை நிகழ்ந்தசெய்கையெலாம் இயம்பியபின் - இலங்காபுரியின்கண் நடைபெற்ற செயல்கள் முழுதையும் சொன்னதன்மேல், அலங்கிய சூடாமணியும் அவன் கரத்தில் ஈந்தனன் - (சானகியம்மாள் கொடுவென்று கொடுத்த) பிரகாசிக்கின்ற சூடாமணியையும் அந்த இராகவன் கையிற் கொடுத்தான். ஏ - அசை.

93. இ - ள் : மிக்க தசரதன் புரிந்த விழுமிய மாதவ புதல்வன்-மேம்பட்ட தசரதச் சக்கரவர்த்தி செய்துவைத்த விழுப்பமான மகாதவப்பயனாக அவதரித்த ஸ்ரீராமபிரான், இலங்கை நகரிடை புக்கு இராவணன்மேல் பொர கருதி - இலங்காபுரியின்கட் சென்று இராவணனோடு யுத்தஞ்செய்ய நினைந்து சுக்கிரீவன் முதலாக சொல்லிய வானரங்களோடும்-சுக்கிரீவன் முதலாகச்சொல்லப்பட்ட குரங்குவீரர்களோடும், தெற்கிலுறும் பெருங்கடலின் திரைகரையைக் கண்டனன் - தென்திசைக்கணுள்ள பெரிய சமுத்திரத்தின் அலைகள்வீசிக் கொண்டிருக்கும் கரையைக் கண்டார்.

இங்கே தென்கடலின் கரையென்றது தனுக்கோடியை. மாலியவான் என்னும் மலையினின்றும் தெற்கு நோக்கிவந்து மதுரையைக்கண்டு தனுக்கோடியையடைந்தாரென்க. அவர் மதுரையில் சோமசுந்தரக் கடவுளுடைய திருவருளைப் பெற்றுக்கொண்டு தனுக்கோடிக்கு வந்தார் என்பதை,

"இரவிதன் மரபில் வந்த இராமனே யெமக்குத் தென்கீழ்
விரவிய திசையிற் போகி விரிகடற் சேது கட்டி
கரவிய உள்ளக் கள்வன் கதிர்முடி பத்துஞ் சிந்தி
அரவமே கலையி னாளை அருஞ்சிறை யகத்து நீக்கி"

என்னுந் திருவிளையாடற்புராணச் செய்யுளானறிக.

94. இ - ள் : மூதுணர்ந்த பின்னவனும் வீடணனும் - பழமையான சாத்திரங்களைக் கற்றறிந்த தம்பியாகிய விபீடணனும், முன்னவனோடும் பகைத்து - தமையனாகிய இராவணனுடனே பகைத்து செயராமபிரானருகில் வந்தணைந்தான் - வெற்றியையுடைய ஸ்ரீராமபிரான் பக்கத்தில் வந்து அடைக்கலமாகச் சேர்ந்தான், தூயவனும் - பரிசுத்தவானாகிய ஸ்ரீராமபிரானும், அன்னவனை-அந்த விபீடணனை இனி இலங்கைக்கு அரசு ஆக-மேல்வருங் காலங்களுக்கு இலங்காபுரிக்கரசனாக, சொன்ன முறையால் - நூல்களிற் சொன்ன விதிப்படி, அபிடேகம் புரிந்து வைத்தனன்-மகுடாபிடேகஞ் செய்துவைத்தார்.

ஏ - அசை அரசாக வைத்தனனென்றியையும். அரசு - அஃறிணை ஈறுபோல் வந்த உயர்திணை

95. இ - ள் : நாயகனாகிய இராமன்-(சகல உலகங்களுக்கும்) தலைவராகிய ஸ்ரீராமபிரான், நளனைக் கொண்டு - நளனென்னும் சிற்பியனைக் கொண்டு ஆய பெருங்கடற்கு இடையே - அந்தப் பெரிய சமுத்திரத்திற்கு நடுவில், அணை என்னும் சேதுவினை - அணையென்று சொல்லப்படுகின்ற

சேதுவை, ஆற்றுவித்து - கட்டுவித்து அவ்வழியே - அந்த மார்க்கமாகவே, பாயும் நெடு வானரராம் படைகளொடு - பாயும் இயல்பினையுடைய குரங்கு வீரர்களென்னும் சேனைகளோடும், தியர் செறிந்திடும் இலங்கை சுவேலமலை சேர்ந்தனன்-இராக்கதர்கள்நெருங்கியிருக்கும் இலங்காபுரியிலுள்ள சுவேலமலையில் வந்தார். ஏ - அசை.

அணை, சேது, பாலம் என்பன ஒருபொருட் கிளவிகள். சுவேலமலையைத்தானே பாசறையாகக் கொண்டிருந்தாரென்க. சுவேலமலையே பிற்காலத்துச் சிங்களத்தில் காட்டுத்தம்பளையென வழக்குகின்றதுபோலும்.

யுத்தகாண்டம்

96. இ - ள் : பின் - சுவேலமலையில் வீற்றிருந்ததன் மேல், இராகவன் பணித்திட-ஸ்ரீராமபிரான்கட்டளைசெய்ய, பெருவலி யமைந்து முன்னர் நின்றிடும் நீலனே முதல் வானரர்கள் - பெருவலியைப் பெற்று முன்பாக நின்ற நீலனை முதலாகக்கொண்ட குரங்கு வீரர்கள், இ நிலம் செறிகலொலொடு மரங்களை யெடுத்து-இந்த இலங்கையில் நெருங்கிநிற்கின்ற மலைகளையும் மரங்களையும் எடுத்துக்கொண்டு முன்னர் ஏகிய இலங்கையை முற்றுகை செய்து - முற்படையாகக்சென்றிலங்கையை முற்றுக்கையிட்டு.

இச்செய்யுள் - குளகம். முற்றுகை - வளைத்தல்.

97. இ - ள்: தீயராவணன் பணியினால்-கொடியவனாகிய இராவணனது கட்டளையின்படி, போரிடைச் சேர்ந்த - யுத்தத்தில் வந்தெதிர்த்த மாயன் பிரகத்தனை மற்றுளார் தம்மை - வஞ்சனையுடையவனாகிய பிரகத்தனையும் மற்றும் உள்ள அரக்கர்களையும், காயம் விட்டிட பொருதனர்-உடம்பைநீக்குமாறு (இறக்கும்படி) போர் செய்ததுமன்றி, வீரம் மேல்கொண்டு-தங்கள் சாதுரியங்களை மேற்கொண்டு, கடந்திறல் அரிமா மேய வன்மையுங்காட்டினர் - கடுமையான வலியையுடைய சிங்கம்போன்ற வலிமையையுங் காண்பித்தனர். பொருதனர் - முற்றெச்சம்.

செய்து, பொருது காட்டினர் என மேலைச்செய்யுளோடு கூட்டி முடிக்க. அரிமா-சிங்கம். மேய-உவமவிடைச்சொல்

98. இ-ள்: சுக்கிரீவனும அநுமனும் மராமரந் துளைத்த அ குமாரனும் தம்பியும் அவரிடை வந்து-சுக்கிரீவனும் அனுமானும் மராமரங்களைத் துளைத்த ஸ்ரீராமபிரானும் இலக்கு

மன்னனும் யுத்தத்தில் வந்தெதிருன்றி, புக்க வெம் திறல் அரக்கரை வேரொடும் போக்கி – தம்மோடு யுத்தத்தில் வந்தெதிர்த்த கொடுந்திறலையுடைய இராக்கதர்களை அடியோடு கொன்று, தேவரும் வியப்ப – (மானிடருமன்றி) தேவர்களும் வியந்துகூற, மிக்க வீரமுங்காட்டினர் - தங்கள் மிகுந்த வீரத்துவங்களையுங் காண்பித்தார்கள்.

தேவரும் என்பதன்கணும்மை எச்சம்.

99 இ – ள்: அன்ன போதினில் – அவ்வாறு யுத்தஞ் செய்யுஞ் சமையத்தில், இந்திரசித்தெனும் அடலோன் – இந்திரசித்தன் என்கிற வலிமையையுடையவன், மன்னன் மைந்தராம் இராம லக்குவர்களை – சக்ரவர்த்தி திருக்குமாரர்களாகிய ஸ்ரீராமபிரானையும் இலக்குமன்னனையும், வன்மை துன்னும் நாகபாசத்தினால் பிணித்தனன் - வலிமைசேர்ந்த நாகபாசத்தினாலே கட்டினான், பன்னகாரி தொடர்ந்துவந்து - (அப்பொழுது அவ்விடத்தில்) பாம்புகளுக்குப் பகைவனாகிய கருடன் உடனே வந்து, அதன் வலிபறக்கத் தொலைத்தனன் – நாகபாசத்தினது வலிமையை (பஞ்சுபோல்) பறக்குமாறழித்தான்.

கருடன் வந்துழி நாகபாசத்தின் வலி எங்ஙனம்போயிற்றென்றறியாது போயிற்றென்பார் "அதன் வலி பறக்க" என்றார்.

100. இ - ள்: சம்பு வெள்ளி பொருப்பினை எடுத்தவன் – சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலாசகிரியைத் தூக்கிய இராவணன், சலியாது - இழைக்காமல், வில்லிடை அம்பு பூட்டியே அமரிடை எதிர்த்து – வளைத்தவில்லின்கண் பாணங்களை அநுசந்தித்துக்கொண்டு யுத்தத்தில் எதிர்த்து, தும்பை சூடிய இராகவன் பொருதிட தொலைந்து – தும்பைமாலையைத் தரித்த ஸ்ரீராமபிரான் எதிர்த்துப் போர்கொடுக்கத்தோல்வியடைந்து, கொதித்து – மனமழன்று, கும்பகன்னனைத் துயிலெடுத்தேவினன் – கும்பகன்னன் என்னும் தனது தம்பியை நித்திரையினின்றும் எழுப்பி (இராம லக்குமன்ன மன்னரோடு பொருவாயாக என்று சொல்லி) அனுப்பினான்.

அம் – சாரியை. ஆறுமாதபரியந்தஞ்செய்யும் நித்திரைக்கு இடையிற் பங்கம்நேரிடின் அவற்கு மரணமென்றறிந்தும், தனக்கு நேர்ந்த ஆபத்தின் நிமித்தம் இராவணன் கும்பகன்னனை எழுப்பினனென்றறிக. இந்திரசித்தன் நாகபாசத்தாற் கட்டித் தமக்குவெற்றிகண்டுமீண்டவுடன் மகன்மேல் காதல் கூர்ந்து களிப்புற்றிருந்த இராவணன் பெரியதிருவடிகளால் இராமலக்குமன்னர் பிழைத்துப் போர்க்கறை கூவுதலைக்

கேட்டு, இனி நானே மானுடரை வெல்வேனென்று இரண்டாநாட் போரில் வந்து தோல்வியுற்றவன், மானுடர் வலியரென்றுணர்ந்து தன்னிலும் இவரை இவனே செயிக்கத்தக்கவனென்று கருதிக் கும்பகன்னனை எழுப்பினானென்றறிக இரண்டாநாட் போரில் தோல்வியுற்று அவலமாக மீண்டான் என்பதை,

"வாரணம் பொருத மார்பும் வலியகுன் றெடுத்த தோளும்
நாரத முனிவர்க் கெல்லாம் நலம்பெற உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும்
வீரமுங்களத்தேபோட்டுவெறுங்கையாயிலங்கைசேர்ந்தான்'

என்னுங் கம்பராமாயணச் செய்யுளா லறிக.

101. இ-ள்: முன்னம் வாலியை மார்பகம் துளைத்திடும் முதல்வன் - முன்னரே வானரவேந்தராகிய வாலியை மார்பின்கண் (அம்புவிட்டுத் துளைத்த) தலைவராகிய ஸ்ரீராமபிரானானவர், பண்ணும் போரினில் அரக்கர்கள் பலரொடு வந்து துன்னி – சொல்லப்படுகின்ற யுத்தத்தில் அனேகம் அரக்க வீரர்களோடும் வந்து நெருங்கி, வானர வீரரைத் தொலைத்துஉணும் – குரங்கு வீரர்களை அழிவுசெய்து எடுத்து உண்ணுகின்ற, கும்பகன்னன் ஆருயிர் நீங்கிட கடிதினில் தொலைத்தான் – கும்பகன்னனுடைய அருமையான உயிர் நீங்கும்வண்ணம் சீக்கிரத்தில் கொலைசெய்தார்.

உண்ணும்என்பது உணும்என இடைக்குறைந்து நின்றது.

102. இ – ள்: பின் - (சிறப்பனாகிய கும்பகன்னன் இறந்த)பின்பு, தீய இந்திரசித்துப் போரிடைசேர்ந்து - கொடியவனான இந்திரசித்தன் யுத்தத்தில் வந்து, செய்ய தாமரையாசனன் படையினைச் செலுத்தி – செந்தாமரைப்பூவை ஆசனமாகவுடைய பிரமாவின் படையைவிடுத்து, தூய ராமனை தம்பியை வானரத்தொகையை – பரிசுத்தமுடைய ஸ்ரீராமபிரானையும் லக்குவனையும் குரங்குக் கூட்டங்களையும், அறிவு எல்லாம் மாள மாயமாகவே மயக்கினன் – அறிவு முழுவதும் கெடுமாறுசெய்துமாயத்தன்மையாகமயங்கும்படிசெய்தான்.

103. இ – ள்: சண்டவாயுவின் திருமகன் – வேகத்தையுடைய காற்றினதழகிய புதல்வனாகிய அநுமான், வடதிசை சார்ந்து – உத்தரதிசையிற்போய், கொண்டல் சேருறும் மாமருந்து மலையினைக்கொணர்ந்து - மேகங்கள் படிகின்ற பெரிய சஞ்சீவிமலையைக் கொண்டுவந்து, மண்டும் மோகம்நீத்து அவரெலாம் வாழ்ந்திடச்செய்து - (அச்சஞ்சீவிமலையினாலே) மூடிக்கொண்டிருந்த மயக்கம் நீங்கி அவர்கள் எல்லோரையும்

பிழைக்குமாறு செய்வித்து, அ மலையையும் படர்ந்து பண்டு போல வைத்தனன் – அந்த மலையையுங் கொண்டுசென்று முன்போல வைத்தான்.

"மென்றொடர் மொழியிற் சிலவேற்றுமையிற், றம்மின வன்றொட ராகா மன்னே" என்னும் நன்னூல் விதிப்படி மருந்து என்னும்மென்றொடர் மருத்து என்றாயிற்று. செய்து என்பதன்கண் பிறவினை விகுதி தொக்குநின்றது.

104 இ - ள்: இந்திரன் பகைவன் - இந்திரசித்தன், இநிலந்தனில் நிகுபலை எனும்இடம் குறுகி–இந்த இலங்கையில் நிகும்பலைஎன்னுமிடத்திற்போயிருந்து பன்னும்வேள்வி ஒன்று ஆற்றினன் – (மனுடரையுங் குரங்கையும் வெற்றி கொள்வதற்கென்று) சொல்லப்படும் ஒருயாகத்தைச் செய்தனன், சொன்ன வீடணன் தன்னொடும் சுமித்திரை மைந்தன் – (நும்மை வெல்லுதற்குரிய யாகத்தை இன்ன இடத்திற் சென்றிருந்து செய்கின்றானென்று) சொல்லிய விபீடணரோடும் சுமித்திரையின் புதல்வராகிய இலக்குமன்னர், (அவ்விடத்திற் சென்று) அன்ன வேள்வியை அழித்தபின் அவனையும் அழித்தான் -அந்தயாகத்தை அழிவுசெய்தபின்பு இந்திரசித்தனையுங் கொன்றார்.

105. இ - ள்: வேட்ட வேள்விபோய் மைந்தனும் விழிந்திடும் செய்திகேட்டு – செய்தயாகமும் அழிந்து இந்திரசித்தனாகியமகனும் கொலையுண்டமையைக் கேள்வியுற்று, இராவணன் கோபதாபத்தொடும் கிளர்ந்து -இலங்கைவேந்தனாகிய இராவணன் கோபக்கொதிப்போடும் போரில் முயற்சித்தெழுந்து, தீட்டும் வெம் சரம் செலுத்தி வானரங்களை வருத்தி – தீட்டுகின்ற கொடிய அம்புகளைப் பிரயோகஞ் செய்து குரங்குகளை வருத்தமுறச் செய்து, பூட்டும் வார்சிலை இராகவனோடு அருஞ்சமர் புரிந்தான் – நாணைப் பூட்டுகின்ற நீண்ட கோதண்ட வில்லையுடைய அயோத்தி வேந்தனாகிய ஸ்ரீராமபிரானோடரிதாகிய யுத்தஞ் செய்தான்.

வேட்ட என்பதற்கு விரும்பிய எனப் பொருள்கோடலுமொன்று.

106. இ - ள்: இராமனும் வெருவும் போர்பல வியந்திட ஆற்றி- ஸ்ரீராமபிரானும் அஞ்சத்தகும் பலவிதமான யுத்தங்களை எவருமெடுத்துப்பேசுமாறுசெய்து, பிரமன் வெம்படை விட்டு- கொடிதான பிரமப்படையைப்பிரயோகித்து, இராவணன் முடிபிறங்கும் சிரமெலாம் அறுத்துஒழித்தனன்–இராவணனது கிரீடங்கள் விளங்குகின்ற பத்துத் தலைகளையும்

அரிந்து தள்ளிவிட்டனர், விண்ணவர் செய செய என்று வியந்து – தேவர்கள் செய செய என்று வியந்துகூறி, விரியும் பூமழை சொரிந்தனர்-பரந்த மலர்மாரியை வருஷித்தார்கள்.

செய செய மென்னுமடுக்கு உவகைபற்றிவந்தது. இங்கே பிரமப்படைஎன்றமையின் "திடம்பட்ட ராமபாணம்செருக்களத் துற்றபோதில், கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கைவேந்தன்" என்ற கம்பராமாயணச் செய்யுளோடு மாறுபட வருதல் உய்த்துணரத்தக்கது.

107. இ - ள்: இராமனுஞ் சேர்ந்து - ஸ்ரீராமபிரானும் அரண்மனையினுட்போய், வீடணன் தனை அரக்கர் தங்களுக்கு அரசனாய் அமர்ந்து தென்னிலங்கை புரக்க விடுத்து - விபீடணனை அரக்கர்களுக்கரசனாயிருந்து தென்னிலங்கையைஅரசு புரியும்படி விடுத்து, பொருக்கென எரியுளே புகுந்து சுசி எய்தியே புறர்வரும் சனகன் திருக்குமாரியை அழைத்தனன் – சீக்கிரமாக அக்கினியிலே பிரவேசித்து பரிசுத்தமடைந்து வெளியேவந்த சனகமகாராசாவின் திருக்குமாரத்தியாகிய சீதாபிராட்டியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டனர்.

ஏ - அசை. அரக்கன் வஞ்சித்துத் தன்னகரியிற் சிறையிருத்திய தோஷ நிவிர்த்தியின் பொருட்டு, தீயின் மூழ்கச் சுத்தமாயினரென்றறிக.

108. இ - ள்: ஐயன் – ஸ்ரீராமபிரானானவர், இந்திரன் வரத்தினால்–தேவேந்திரன் கொடுத்த வரப்பிரசாதத்தினாலே, அ இடை நிகழ்ந்த வெய்ய போரினில் இறந்திடும் வானரர் உய்யுமாறு எடுத்து-அவ்விடத்திலே நடந்த கொடிய யுத்தத்தில் இறந்த குரங்கு வீரர்கள் உயிர்பெற்றெழும்படி செய்து, செய்ய ஆகும் பொருள் பல சிறப்பொடும் வழங்கி – செம்மையான பொருள்களை வரிசைகளோடும் (தரக்கண்டு) கொடுத்து, அவரெலாம் உவந்திடச் செய்தான் – அந்த வான்ர வீரர்களெல்லோரும் மனமகிழும்படி செய்தார்.

ஈண்டுப் பொருளென்றது தன்பகைவனாகிய இராவணனை வென்றெடுத்த பொருளே என்க

109. இ - ள்: நாதன்-ஸ்ரீராமபிரானானவர், முன் அநுமனைப்போக்கி – (எனது வருகையை அயோத்தியிற் சென்று பரதனுக்குச் சொல்லென்று) முந்தி அநுமனை அனுப்பி, மாதுதன்னொடும் இலக்குவன் தன்னொடும் - சீதாதேவியோடும்

இலக்குமனவரோடும், வானில் போதும் புட்பகமேறி-ஆகாயத்திற் செல்லுகின்ற புட்பகவிமானத்திலேறி, தீதில் வீடணன் தன்னொடும் வானரர் சேர - குற்றமில்லாத விபீடணனோடும் (சுக்கிரீவன் முதலிய) குரங்கு வீரர்கள் சேர்ந்துவர, அயோத்தியை நாடி விரைவினி லேகினன் - அயோத்தியாபுரியை நோக்கி விரைந்து சென்றனர்.

கள்ளியில் தேவவஸ்துவாகிய அகில் தோன்றுமாறு போல அரக்க குலத்திற் பிறந்தும் அம்மரபுக்குரிய தீக்குணங்களில்லாதவரென்பார் "தீதில் வீடணன்" என்றார்.

110. இ - ள் : குனியும் வில்லுடை ராகவன்-வளைகின்ற கோதண்ட வில்லினையுடைய ஸ்ரீராமபிரானவர், அநுமன் சொல்லினால் பரதன் தன் செய்தியுமறிந்து-(அயோத்திக்குச் சென்று வந்த) அநுமானது சொல்லினாலே பரதனுடைய செயல்களையுந் தெரிந்துகொண்டு, தனை அழைத்திட வந்தவர் தம்மொடும் சார்ந்து-தன்னை அழைக்கும்படியாக வந்தவர்களோடும்சேர்ந்து, கோதறும் முனிவர் புனையும் வேடம்நீத்து-(காமம்முதலான) குற்றங்களில்லாத முனிவர்கள் தரிக்கின்ற தவவேடத்தை நீக்கி, அணிமதி லயோத்தியிற் புக்கான்-அழகிய மதிலையுடைய அயோத்தியா புரியில் வந்தார்.

111. இ - ள் : குரு வசிட்டனும் பிறரும் வந்து-புரோகிதராகியவசிட்டரும் ஒழிந்தோரும்வந்து, இராமனைக்குறுகி-ஸ்ரீராமபிரானை அடைந்து, அரசு செய்கென அணிமுடி சூட்டினர் - (நீயே இனி) அரசைச் செய்யக்கடவை என்று சொல்லி யழகிய முடியைச் சூட்டினார்கள், அவனும்-ஸ்ரீராமபிரானும், அரிவை தன்னொடும் அயோத்தியா நகரினில் அமர்ந்து-சீதாபிராட்டியாரோடும் அயோத்தியாபுரியில்வீற்றிருந்து, விரியும் வெண்குடைநிழற்றியே மேதினிபுரந்தான்-விரிகின்றதவளசந்திரநிழலைத்தந்து பூமியைப்பரிபாலித்தார்.

பிறர் - மந்திரியாகிய சுமந்திரன் முதலாயினோர்.

உத்தரகாண்டம்

112. இ - ள் : கலகம் ஆற்றிய இராவணன் கவர்ந்து கொண்டு அகன்ற - கலகம்செய்த அரக்கவேந்தனாகிய இராவணன் திருடிக்கொண்டுபோன, திலக வாணுதல்மனைவியை சேர்ந்தனன் என்று-திலகமிட்ட ஒளிபொருந்திய நெற்றியையுடைய சீதாதேவியாகிய தன்மனைவியை சக்கரவர்த்தி திருக்குமாரர்)மீளவும் சேர்த்துக்கொண்டாரென்று, உலகம்பேசிய

பழிமொழிக்கு உள் அகம் நாணி-உலகத்தவர்கள் பேசுகின்ற வசை வார்த்தைக்கு மனம் நாணமுற்று, இராமனும்-ஸ்ரீராமபிரானும், சீதையை வெறுத்து விலக நீக்கினன் - சீதாதேவியைவெறுத்து தன்னினின்றும் விலகுமாறு நீக்கிவிட்டனர்.

113. இ - ள் : விலக்கும் சீதையை-(ஸ்ரீராமபிரான்வெறுத்து) விலக்கிய சீதாதேவியை, இலக்குவன் விரைவினில் காட்டினில் கொண்டுபோய்விட-(தேரிலேற்றி) சீக்கிரமாக வான்மீகி வனத்திற் கொண்டுபோய் தனிமையாக விட, அவளை-(வனத்தில் தனித்தவளாய் அலறிக்கொண்டுநின்ற) அச்சீதாதேவியை, மா வான்மீகிமுனிவர்-மகத்துவந் தங்கிய வான்மீகிமுனிவர், எதிர்ந்து - எதிரில் வந்து, குலைக்க அருந்தவம்மேவும் ஆச்சிரமத்தில்கொடுபோய்-அழித்தற்கரிதாகிய தவத்தில் தானிருக்கும் ஆச்சிரமத்திற் கழைத்துக்கொண்டுபோய், அலக்கண் நீங்கிட இருத்தி ஆதரித்தனன் - துன்பம் நீங்கும் வண்ணம் தன்னுடன் இருத்திப் பாதுகாத்துவந்தார்.

114. இ - ள் : மெய் தபோதனர் வேண்டிட-உண்மையான தவச் செல்வர்களான முனிவர்கள் (இவன் கேடு செய்கின்றானென்று) வேண்டுதல் செய்ய, இராமனும் - அதற்குடன்பட்ட ஸ்ரீராமபிரானும், சாடுமாறுவிரைந்து சத்துருக்கனை ஏவினன் - அவனைக் கொல்லும் வண்ணம் சீக்கிரத்தில் சத்துருக்கனை அனுப்பினர், அவனும் - சத்துருக்கனும், யுத்தம் மேவி லவணன் உயிரினை சாடி - யுத்தத்தில் வந்து இலவணனென்பவனதுயிரைக் கொன்று, அ தபோதனர் குழுவினை அன்பொடும் காத்தான்-அந்தத்தவத்தையே தனமாகவுடைய முனிவர் கூட்டத்தை அன்போடும் இரட்சித்தான்.

ஏ - அசை, சாடி - காத்தானென்றியையும்.

115. இ-ள் : சனகி போந்த ஓர் வடிவினை-சீதாதேவியை ஒத்திருக்கின்றஒருதிருவுருவை, செந்நிறம் தயங்கும் கனகமொடு செய்து வைத்து அருமகம் கண்ட-செந்நிறம் விளங்குகின்ற பொன்னினாலே செய்துவைத் தரிதாகிய வேள்வியைச் செய்த, அனகன் அச்சுதன் இராமன்பால் - அனகனும் அச்சுதனும் ஆகிய ஸ்ரீராமபிரானிடத்தில், தவப்பெரும் முதல்வன் -தவத்தினால் பெருந் தலைவராகிய வான்மீகி முனிவர், சனகி தன்னையும் அன்பொடு கொடுத்தனன் - சீதாதேவியையும் அன்புடனழைத்துக் கொண்டுபோய்க் கொடுத்தார்.

தன்னையும் என்பதன்கணும்மை எச்சம். அனகன்-பாவமில்லாதவன். அச்சுதன் - அழியாதவன். அழியும் பெற்றித்தாய இவரை அச்சுதன் என்றது உபசாரம். மனைவி இல்லை

யேல் அவளுருவைப் பொன்னாற் செய்துவைத்து வேள்வி செய்ய வேண்டுவது விதியாகலின் சனகிபோன்ற வடிவினை "கனகமேகொடு செய்துவைத்தருமகங்கண்ட" என்றார், உம்மையால் குசன் லவன் என்னும் இரு புதல்வரையும் கொடுத்தார் என்பது,பெறப்பட்டது.

116. இ - ள் : அன்ன நாயகன் நெஞ்சு அகம் அயர்த்திட நின்ற பன்னி பூமகள் சீதையும்-அந்தச் ஸ்ரீராமபிரான் தன் மனத்தில் லயங்கொள்ளும்படி நின்ற மனைவியும் பூமகளும் ஆகிய சீதாதேவியும், பரிவொடு வேண்ட – (நீ எனக்கிடந் தருக என்று) அன்பினோடும் வேண்டுதல் செய்ய, அன்னையாகிய நிலமகள் அளித்திடும் துவாரம் தன்னில் – பாதாவாகிய பூமிதேவி பிளந்து கொடுக்குந் துவாரத்தில், கற்பியல் தயங்க இன்பொடும் புகுந்தனள் - கற்பிலக்கணம் எவ்விடத்தும் எக்காலத்தும் பிரகாசிக்கும்படியாக இன்பத்தோடும் புகுந்தார்.

117. இ – ள்: வண்ண வார்சிலை முரித்தவன் ஆணையின வழியே - அழகிய கோதண்ட வில்லை முரித்த ஸ்ரீராமபிரானது கட்டளையின்படியே, வானரவீரரும்–குரங்கு வீரர்களும், தண்ணறும் புனல் சரயு என்று புகலும் அண்ணல் மாநதி முழுகி – குளிர்ந்த நல்ல நீரையுடைய சரயுவென்று பெரிய பூவுலகத்தவர்கள் புகழ்ந்து சொல்லுகின்ற பெருமையையுடைய பெரிய நதியிலே படிந்து, யாக்கையும் விடுத்து – வானர வுடம்புகளையும் இங்கே விட்டு, விண் அடைந்தனர் – தேவர் உலகத்திற் சேர்ந்தார்கள்.

118. இ – ள் : பரதனோடு மற்றிருவரும்–பரதனுடனே மற்றைய இலக்குமணனன் சத்துருக்கன் என்னுமிருவரும், பழைய தம் வடிவம் மருவி வைகினர் – பழைமையான தம்முருவங்களைப் பெற்றிருந்தார்கள், வரத சின்மய ராமனும் - சிரேட்டமான ஞானரூபியாகிய ஸ்ரீராமபிரானும், மானுட வடிவினை விடுத்து - மானுட வுடம்பை நீக்கி, வைகுந்த நிலயம் விரவி – வைகுந்த பதவியை அடைந்து, ஆருயிர் புரந்து வீற்றிருந்தனன் – அருமையான சீவவர்க்கங்களைப் பாதுகாத்துக்கொண்டு வீற்றிருந்தருளினார்.

35714